செந்தமிழ்

தொகுதி-90 ஜூலை-96 பகுதி-7

திங்கள் இதழ்

ஆசிரியர்: **மா. தனுக்கோடிபாண்டியன்**, பி.ஏ.; பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

பொறுப்பாசிரியர்: **பேரறிஞர் நா.பாலுசாமி**
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பி.எச்டி., எம்.எட்.,

செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர் தமிழண்ணல்
முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பேரறிஞர் செ.கந்தசாமி
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் அ.தட்சிணாமூர்த்தி,
முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் பழநி. அரங்கசாமி
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

பேரறிஞர் ம.ரா.போ. குருசாமி,
செந்தில் தாமு நகர், கோயம்புத்தூர்.

பேரறிஞர் ச.மெய்யப்பன்
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர். அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

பேரறிஞர் சி.கதிர் மகாதேவன்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பேரறிஞர் கு.துரைராசு
முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

பேரறிஞர் அ.அ.மணவாளன்
தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம்

பேரறிஞர் க.ப.அறவாணன்
மத்திய பல்கலைக் கழகம், புதுவை.

பேரறிஞர் சூ.இன்னாசி
கிறிஸ்துவத் தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்

பெரும்புலவர் இரா.இளங்குமரன்
திருவள்ளுவர் தவச்சாலை, அல்லூர், திருச்சி.

பேரறிஞர் சி.மொ. இராசேந்திரன்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் நா.பொன்னப்பன்
மதுரைக் கல்லூரி, மதுரை

பேரறிஞர் திருமதி பத்மா சீனிவாசன்
ஆங்கிலப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பேரறிஞர் நா.ந.மாணிக்கம்
தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் திருமதி சரசுவதி விசய வேணுகோபால்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

பேரறிஞர் எஸ்.எம்.கமால்,
21, ஈசா பள்ளிவாசல் தெரு, இராமநாதபுரம்

பேரறிஞர் இ.கி.இராமசாமி
தமிழ்ப் பேராசிரியர், யாதவர் கல்லூரி, மதுரை.

பொருளடக்கம்

		பக்கம்
1.	சேதுநாடுந் தமிழும் -மகாவித்வான் ரா.ராகவய்யங்கார்	256
2.	எல்லோர்க்கும் தொல்காப்பியம் -பேரறிஞர் நா.பாலுசாமி	265
3.	அபிராபி அந்தாதி பேரறிஞர் அ.தட்சிணாமூர்த்தி	277
4.	பாடுபொருள் நோக்கில் ஒப்பாய்வுக் களங்கள் -பேரறிஞர் கதிர்.மகாதேவன்	281
5.	பொன்பாண்டித்துரைத் தேவர் பாடிய காவடிச் சிந்து	289
6.	பிழை உணரப்பட்ட 'கடுஞ்சூல்' - பேரறிஞர் எஸ். சௌந்தரபாண்டியன்.	294

சேதுநாடும் தமிழும்

மகாவித்வான் ரா.ராகவய்யங்கார்

(முன் இதழ்த் தொடர்ச்சி...)

ஆளவந்தாரென்பார் வாசிட்ட நூலைத் தமிழிற் பாடினார். பெரும்பற்றப்புலியூர்நம்பி என்ற மாதவபட்டர் திருவாலவாயுடையார் திருவிளையாடலைப் பாடினர். கவிராஜபண்டிதர் என்பார் சௌந்தரியலகரியைத் தமிழிற் பாடினர். பெருமாளையர் நெல்லைக் கோவை பாடினார். சாமிகவிகாளருத்திரரென்பார் அழகர்பிள்ளைத் தமிழ் பாடினார். கவிகுஞ்சர பாரதி என்பார் அழகர்கலம்பகம் பாடினார். இவ்வோரூர்ப் புலவரைப் பற்றி எழுதப்புக்கால் அஃதொருபெருநூ லாகுமென்பது திண்ணமாக இவ்வூர்போலப் பல்லாயிரமூர்களையுடைய இச்சேதுநாட்டுப் புலவரை அளக்கப்புக்க என்மதியின் மைதானென்னே.

இவ்வோரூரில் செவ்வைச் சூடுவார்முதல் நம்காலத்துத் தமிழ்க் கவிதைகளைச் சுவைபலவமைத்து விரைவாகப் பாடுதலாற் பெயர்சிறந்து இம்மகாசபைக்குச் சிரோரத்தினம்போல விளங்கும் நம் மாட்சிமை பொருந்திய சேதுபதி மஹாராஜரவர்களாலும் அவர்கள் அறிவுடைத் தந்தையாராலும் சிலேடைப்புலியென்று பட்டஞ்சூட்டி ஆதரிக்கப்பெற்ற பிச்சுவையரிறுதியாக நூற்றுக்கணக்கான புலவர்கள் தமிழறிவாற் சிறந்து விளங்கினராவர்.

இவருட்.டேவியருள் பெற்ற கவிராஜபண்டிதர் இச்சேதுநாட்டு வீரசோழனென்னும் ஊரிலே நெடுங்காலம் வதிந்து இறுதியிற்றுறவியாய் ஆங்கே சமாதிகொண்டனர். இவர்க்குச்சௌந்தரியலகரிவடநூலைத்தமிழிற் பொருள் கூறிய ஆசிரியர் பிரமாதிராயர் என்பார். இவர் சத்தியருள் பெற்றவர். இவர்

மதுரை மீனாக்ஷியம்மையடியிட்ட பூமாலை திருக்கழுத்திற்றானே ஏறப் பாடித் தன்னொடுவாதித்த புலவனைவென்று, ★ நல்லூர், கடம்பை இவ்வூர்களைப் பரிசிலாகப் பெற்றவர்.

கவிராசபண்டிதருடைய திருக்குமாரர் நெல்லைவருக்கக் கோவை பாடியவர். அவரிளம்பிராயத்தே பிற்காலத்துப் பாண்டியனொருவன் தென்காசி, மதுரை, திருநெல்வேலி, கருவை என்னும் நாலூர்ப்பெயரும் இந்நாலூர்ச் சுவாமி பெயரும் அம்மை பெயருமமைத்து ஒரு கலித்துறைபாடுக என்றபோது பாடிய,

> "இலகேழகிலத்தர் சொக்கர் முத்தீசரிபந்தொழுவோர்
> கலைதேர்தென் காசிமதுரை நெல்வேலி கருவைவந்த
> பலர்கேள்வருள்ளி ரெம்பங்குநிற்பீர் வந்துபாதந்தொழ
> வுலகேகயற் கண்ணியேவடி வேயெங்க ளொப்பனையே"

என்ற செய்யுள் தமிழ்வல்லார் அறிந்ததே. இவரை, "பீரையம்பிகாபதி" யென்றே நெல்லைவருக்கக் கோவைப்பாயிரத்திற் கூறுதல் காண்க. சேதுபதி நாட்டு வீரசோழனிற் கவிராச பண்டிதர் சமாதியுண்மை பலருமறிவர்.

இவரேயன்றித் திருச்செந்திற்பிள்ளைத் தமிழ், சீவகசிந்தாமணிச் சுருக்கம் இவற்றை மிகவும் இனிக்கப்பாடிய பெருந்தமிழராகிய பகழிக் கூத்தர் இச்சேதுபதிகளின் செம்பிநாட்டுச் சன்னாசிக் கிராமத்தவரேயாவர். இஃது,

> "ஆரநாண் மலர்நெட்டிதழ்க் குவளையகவயலி
> லகடுநொந்தொரு கோடிசங்
> கடைகிடக்கக்குரு குபெடை யெனச்சிறகா
> லணைத்திடுஞ் செம்பிநாட்டு
> வீரநாராயணச் சதுர்வேதமங்கலம்
> விளங்கவேவந்தநெடுமால்
> வேதியர் குலாதிபதி தர்ப்பாதனன் புதல்வன்
> மிக்கபகழிக் கூத்தனே"

எனச் சிந்தாமணிச் சுருக்கத் தவையடக்கச் செய்யுளில்வருதலாற் கண்டது. பகழிக்கூத்தர் என்பது சேதுநாட்டுப் புகலூர் ஐயனார் திருப்பெயர். தர்ப்பாதனன் என்பது திருப்புல்லாணித் திருமால் பெயர்.

★ நல்லூர் - நல்லூர்க்குறிச்சியென்பது கடம்பை கடம்பங்குளம்: அதனையடுத்துள்ளது.

வீரை ஆசுகவிராயர்: இவர் அரிச்சந்திர புராண விருத்தம் பாடியவர். இவருடைய செய்யுணடை தமிழ் மக்களுக்கு அளவிலின்பம்பயப்பது. இவரது ஊர் நல்லூர் வீரையெனப்படுவது. நல்லூர் வீரையென்பது சேதுநாட்டு விசுவனூர்ச் சேகரத்துள்ள நல்லூரரையடுத்த வீரையேயாம். இந்நல்லூர் குலோத்துங்க சோழநல்லூர் என்பதாம். இதுவே சேதுபதிகள் பழைய சாச னங்களிற் கண்டவூராம். இவர் தம் அரிச்சந்த்ர புராணத்தைத் திருப்புல்லாணிச் சக்கர தீர்த்தக்கரை மேன்மண்டபத்தில் அரங்கேற்றினாரென்பது அந்நூற்பா யிரத்தா லறிந்தது.

''விதியினரசிழந்த வரிச்சந்திரன்றன்
வியன்கதையாம் வெண்கதையை விருத்தமாக்கி
அதிவிதமாங்கலியுகத்தில் வருசகாத்த
மாயிரத்துநானூற்று நாற்பத்தாறிற்
சதுமறைதேர்புல்லாணித் திருமான்முன்னே
சக்கரதீர்த் தக்கரை மேன்மண்டபத்துட்
கதிதருசீர்நல்லூர்வாழ் வீரையாசு
கவிராசன் கவியரங்கமேற்றினானே''

என்பது இந்நூற்பாயிரம். ''வீரனாசுகவி'' என்னும் பாடமாயின் நல்லூர் இவருடைய ஊர் என்க.

இனித் தண்டலையார் சதகம், தொண்டை மண்டல சதகம் முதலிய நூல்களையியற்றிப் புகழ் படைத்த படிக்காசன் என்னும் புலவர் இந்நாட்டுக் கீழைக்கரையில் ஔரங்கசீப் முதலிய மகமதிய அரசர் மெச்ச வாழ்ந்த சீதக் காதியென்று பெயர் சிறந்த பெரியதம்பி மரக்காயரென்னும் பெருங் கொடைச் செல்வரை வாயாரவாழ்த்திய இனிய பாடல்களும் அவ்வள்ளலிறந்ததற்கு ஆற்றாது உள்ளமுடைந்துருகிப் பாடிய பாடல்களும் ஈண்டுப் பலருமறிந்த னவேயாதலானவற்றை யான் பெயர்த்துங்கூறேன். இச்சீதக்காதிவள்ளல் சேது பதியாற் பெரிதும் அன்பு பாராட்டப்பட்டவரென்பது இவர் பேரானுள்ள நாடகநூலான் அறியப்பட்டது. அத்தகைப் புலவர்,

''மூவேந்தருமற்றுச்சங்கமும் போய்ப் பதின்மூன்றொடெட்டுக்
கோவேந்தரு மற்றொரு வேந்தன் கொடையுமற்றுப்
பாவேந்தர் காற்றிலிலவம் பஞ்சாகப்பறக்கையிலே
தேவேந்தரதாருவொத்தாய்ரகுநாத செயதுங்கனே''

என்றுபாடி இச்சேதுகாவலருடைய பெருங்கொடையும் தமிழாதரிப்பும் உல கறியப் புகழ்ந்தனர்.

மற்றும், மகமதியமதத்தினரெல்லாம் உச்சிமேற்கொண்டு போற்றும் நபி நயினார் சரிதமாகிய சீறாப்புராணத்தை அம்மதத்தினரல்லாத தமிழறிவாளரும் கல்வியின்பத்தால் விழைந்து கற்குமாறு அத்துணைச் சுவைத்ததாக ஐயாயிரம் பாடலாற் பாடிய உமறுப்புலவரென்னுந் தமிழ் நாவலர் இச்சேதுநாட்டுக் கீழைக்கரையிற் சிறந்தாராவர். இவருடைய கவித்துவத்தையும் உயர்குணத் தையுந் தெரிதற்கு ஸ்தாலீபுலாகநியாயமாக இரண்டு செய்யுட்களை யெடுத் துக்காட்டுவல்.

''புரசைக்கடக்கரிகணிரைதட்டறக்குவிரர் புவியைப்படக்கடவியே
சரகுற்றநற்பதவிவழியிற் புகுத்தியுயர் தலைமைக்குவைத்த பெரியோர்
பிரசத்துளித்திவலை சிதறிக் கிடக்குமிருபிணையற்புயத்துநயினார்
அரசுக்குவைத்த நெறிவரிசைக்குமிக்கதுரையபுபக்கரைப் புகழுவாம்''

''படித்தலத்தெழு கடல்குலகிரிநிலைபதற
வெடுத்து வீசிய சண்டமாருதத்திக்கெதிரே
மிடித்துநொந்தசிற்றெறும் பொருமூச்சுவிட்டது போன்ம்
வடித்த செந்தமிழ்ப்புலவர் முன்யான் சொலுமாறே''

இவற்றின் சொன்னோக்கும் பொருணோக்குந் தொடைநோக்கும் நடை நோக்கும் கற்றார்க்குப் பெரிதும் இன்பம் பயக்குமென்றெண்ணுகின்றேன். இவர் வழியினர் மீசலவண்ணக் களஞ்சியப் புலவர். வண்ணம் பல பாடியவர். அவர் வழியினர் இன்றும் இச்சேதுநாட்டுத் தலைநகராகிய முகவைக்குப் பக்கத்துப் பனைக்குளமென்ற ஊரிலுள்ளனர்.

இவ்வுமறுப்புலவரும், திருப்பூவணவுலா, ஆப்பனூர்ப் புராணம் இவை பாடிய கந்தசாமிப் புலவரும் கீழைக்கரையிலிருந்த சீதக்காதிப்பிரவு இடத் திலிருந்து அவரானாதரிக்கப் பெற்றவரென்பது, சீதக்காதிபேரிலுள்ள நொண்டி நாடகத்தா னறியப்படுவது. நல்ல தமிழறிஞராகிய இக்கந்தசாமிப் புலவர் இச்சேதுநாட்டின் ஒரு பகுதியாகிய சிவகங்கையையாண்ட முத்துவடுகநாதேந் தரனைத் தம் உலாவில் ''மன்போசன்முத்துவடுகநா தேந்த்ரனருள், பொன்போ லுமாடைபுனைத்தருளி'' என்பதனாற் சிறப்பித்துரைத்தார். இவ்வுலா நூல் உலகம்புகழுந் தமிழாசிரியராய், இந்நல்லவையையலங்கரித்து விளங்கும் நம் மஹாமஹோபாத்யாயரவர்களால் நன்கச்சிடப்பட்டுள்ளது.

இன்னும், இம்மதத்தினராகிய சவ்வாதுப் புலவர் சேதுபதி வசூரியான் வருந்தியபோது, இராசராசேசுவரி பஞ்சரத்தினம்பாடி அவரை வச்ரதேகியாக்கிச் சுவாத்தன் என்னும் விளைபுலவூரை முற்றூட்டாகப் பெற்றசெய்தி இந்நா டெலாமறிந்ததேயாம். இவர் முகைதீன் ஆண்டவர் பிள்ளைத் தமிழ் பாடியவர். இவர் இச் சேதுநாட்டு எமனீச்சரத்திற் பிறந்து சிறந்தவர். இவர் திருவஎன்னும்

வந்தைவேந்தர் முன்போய்த் தம் சேதுபதியைப் புகழ்ந்து பாடிய,

"கிளையாளன்சேதுபதிரகுநாயகன் கிஞ்சுகவாய் .
இளையார்கலவியிடத்துநம்மீசரிடத்துமன்றி
வளையாதபொன்முடிசற்றேவளையுமகுடமன்னர்
தளையாடிய கையிற்காளாஞ்சியேந் துஞ்சமயதிலே"

என்னு மினிய பாடல் கல்லாத தமிழருமுண்டோ?

"கல்விதறுகணிசைமைகொடையெனச்
சொல்லப்பட்டபெருமிதநான்கே"

என்றபடி கல்வியாலுண்டாயபெருமிதம் மிகவும் உடையார் என்பது, "கலை மதங்கொண்டிடுசவாதுக்கவிச்சரப சாம்பீர்யதுங்கனென்றும்" எனத் தம்பிபட்டி முத்துவேலாயுதக்கவிராயர் ஓலைத்தூக்கிற் கூறுதலானறியப்பட்டது.

"வேண்டாரையனந்தன்வேறுருக்கொண்டுற்றனளோ
தண்டாமரையனந்தன்றானிவனோ வண்டமிழி
னெண்ணோவெழுத்தோவிசையோவியற்புலவர்
கண்ணோசவாதுக்கவி"

என்னும் பழையபாட் டிவர்க்கல்வித்திறத்தை விளக்கும்.

இன்னும், இவர் காலத்தே சருக்கரைப் புலவரென்பார் தம் கவித்திறத் தானும், இராமாயண முதலிய பெருங்காப்பியங்கட்கு உரைசொல்லும் வன்மை யாலும் இச்சேதுபதிகளாற் பெரிதும் பாராட்டப்பட்டுப் பொன்நெட்டிமா லையும் ஊரும் வாகனங்களும் அளிக்கப் பெற்றனராவர். இவர் சேதுபதியைப் பாடிப்பெற்ற ஊர்கள் சிறுகம்பையூர், கொந்தலாங்குளம், கோடிகுடி முதலியன கண்ணங்குடிச் சேகரத்துள்ளன. இவர் பாடியது திருச்செந்தூர்க் கோவை. இவரியற்றிய உரை வேதாந்தசூடாமணிச்சித்தாந்தவுரை. இவர் இவ்வுரைநூல் சேதுபதிமந்திரியாகிய தாமோதரனென் பார்வேண்ட இயற்றியதென்பது,

"உரைதருவேதாந்தசூளாமணியுட்பொருளை
யுலகிலுளோருணரவுரைசெய்கவெனக்கடல்சூழ்
தரையவரையன்சேதுபதியமாத்தியனாந்தாமோ
தரன்கங்காகுலதிலகன்றகுதிபெறச்சாற்ற
வரையறுத்துச்சித்தாந்தப் பொருட்டிறனுந்தோன்ற
வகுத்தனனற்றுறைசைநமச்சிவாயதேசிகன்றாள்
பரவுசிவக்கொழுந்துநிதியருள் கல்விக்கடலைப்
பருகுமுகில்சர்க்கரைநற்பாவலவர்கோனே"

பாயிரத்தா னறியப்படுவது. இப்பாயிரப்பாட்டுச் சருக்கரைப் புலவருடன்கற்ற இராமநாதபுரம் சாமிநாதப்புலவர் பாடியது. ஈண்டுக் குறித்த சேதுபதிபிரதானி தாமோதரனென்பார் வேள்விக்கோவை கொண்டவர். இச்சருக்கரைப்புலவர் வழியிற் புலவராய்ப்பெயர் சிறந்தார் பலருளர். மிழலைச்சதகம், வண்டுவ னப்பெருமாளுசல், திருவாடானைச் சித்திரகவிமஞ்சரி இவை சின்னச்சருக் கரைப் புலவர் பாடியன. திருச்செந்தூர்பரணி, துறைசைக்கலம்பகம் இவை சீனிப்புலவர் பாடியன. பொன்பற்றிச் செல்லியம்மையூசல் சருக்கரை அரு ணாசலப்புலவ ரியற்றியது. வைரவக்கடவுள்பதிகம் சருக்கரை முத்துக்கருப் பப்புலவ ரியற்றியது. இப்புலவர்வழியினர் இக்காலத்தும் இச்சேதுபதிய ளிக்கும் வருஷாசனம்பெற்றுத் தழைக்கின்றாராவர். இவரொப்ப வருஷாசனம் பெற்றுவரும் புலவர்வழியினர்பலர் ஊருணிக்கோட்டை கமுதை முதலிய பல இடங்களிலுள்ளனர். ஊருணிக்கோட்டையிலுள்ளவர் மாசிலாமணிப்பு லவர் வழியினர் கமுதையிலுள்ளவர் குமாரப்புலவர்வழியினர்.

இனி, அழகியசிற்றம்பலக்கவிராயர் தளசிங்கமாலை பாடியவர். இந்நூல் சேதுபதியைப்புகழ்ந்தது. இதன்கண் இவர் சேதுபதியை, ''கல்விசேர்விற்பன் னன்'', 'அடுத்தார்க்கு எந்த நாளும் வளர்ந்த செல்வந் தருவா'னென்றும், ராமேசருக்கு முன்மண்டபஞ் செய்தானென்றும், ''திருப்புல்லாணிக்கோபுரங் கட்டுவித்ததனத''னென்றும், சேதுவிற்சோடசதானஞ்செய் புண்யகுணசாந்த னென்றும், ''காலிலெட்டன்றலையையணிந்தவ''னென்றும், வேதியர்க் கென்றுஞ் செயயுந்தடக்கையுடையவனென்றும், புன்மைசெய்தாருக்கும் நன்மை செய்து புரக்குந்தன்மையனென்றும், ''காளையினிசர்பதம்போற்றியேத் தினவன்'' என்றும் ''மதுரையுங் காத்துவளருந்தெய்வத், தனுக்கோடிகாத் தவ'னென்றும் கூறாநின்றார். இவற்றால் இச்சேதுபதிவரலா றொருவா றுண ரலாகும். இவர் இவரைப் பாடிப்பெற்றபரிசில் மிதிலைப்பட்டி என்ற விளை புலவூர். இப்புலவர்வழியினர் இன்றைக்கும் இவ்வூரை முற்றூட்டாக அனு பவிக்கின்றனர். இவரும் இவர்வழியினரும், சேதுபதிபுரிந்தருளிய நன்றி பாராட்டி நாளும் தாம்தாம் உணவருந்துமுன்னே சேதுபதிக்கு ஒருவாழ்த்துக் கவிபாடுவது வழக்கம். இவர் வழியில் மங்கைபாகக் கவிராயர் கொடுங் குன்றப்புராணம் பாடினார்.

அமுதகவிராயர் ரகுநாதசேதுபதிமேல் ஒருதுறைக்கோவை பாடினார். இந்நூல் தமிழ்மக்களாற் பெரிதும் பாராட்டப்படுவதொன்று. இதன்கண் இவர் இரகுநாதசேதுபதியைத் ''தளவாய்குமாரன்'' எனவும் ''இயலைத்தலைபெற் றமுத்தமிழ் வார்க்கெழுமடங்கு, புயலைப்பொருவு கையான்'' எனவும், ''மகக் கண்ணிற்சிலமறையோரைவாழ்வித்துவான்கொணர்ந்து, சகக்கண்ணிற்சேர்த் தவன்'' எனவும், ''மனுக்கலைநூறெரிந்த வெங்கோன்'' எனவும், ''முறை யாலணிநாவசைந்து, கறங்கா மணிமுன்றிலான்'' எனவும், ''செங்காவியங்கு டையான்'' எனவும், ''கலைவாணர் சங்கத்தமிழ்க் குருகிச்சித்தங்களிப் பவ''னெனவும், ''புகலூர் ஞானாகரன்'' எனவும், ''ஆரியர்போற்றுமிரா மீசர்

நாளிணைக்கன்பு வைத்த சூரியன்'' எனவும், ''பாவுக்கிசையும் பெயரேபுனைந் துமெய்ப்பாவலர்தம், நாவுக்கிசையும் பெரும்புகழான்'' எனவும், ஒரு காலத்தும் பொய்யுரையான் எனவும், ''நடைகற்றவன்றே கொடுப்பதுங்கற்றவன்'' எனவும், ''பன்னுந்தமிழ்ப் பயிர்வாடாதுமாரியிற்பாரின்முத்தும், பொன்னுஞ் சொரியும் ரகுநாதன்'' எனவும். (நம் சேதுபதி மஹாராஜரைப் போல) ''செந்தமிழுங் கீதக்கலையும்வல்லான்'' எனவும், ''சொற்பாவலர் தங்கிளை வாழச் செம்பொன்சொரியும் வண்மைய'' மெனவும், ''நாகரமுந்துதமிழேரின் மைக்கங்குனையச் செய்திவாகர,, மெனவும், ''நாகரமுந்து தமிழேரின்மைக் கங்குனையச் செய்திவாகர'' மெனவும் ''நாலாம்பனுவனவரசச் சொற்றமிழ் நாவலர்க்கு மேலாம்பரிசருண்மால்'' எனவும், ''குஞ்சத்தைவெள்ளைக்குடை யைத்தமிழ்க்குக்குலவுசப்ர, மஞ்சத்தையீயுங்கொடைரகுநாதன்'' எனவும், ''பம்புவியாகரணங்கலை ஞானங்கொள்பண்டிதரா, னம்பும்வியாழன்ரகு நாதன்'' எனவும், ''கோவைத்துறைக்குப்பதினாயிரம்பொன்கொடுத்தி சைகொள், தேவைத்துறைக்குத்துரை'' யெனவும் கூறினார். இவற்றால் இச்சே துபதியுடைய அறிவும், நீதியும், புலவர்க்கீயும் பெருவண்மையும், தமிழபி மானமும், நம் மஹாராஜவர்களைப்போலக் கவிமதுரவாக் குடைமையும் நன்குணரலாகும்.

ஆசிரியநிகண்டுடையரான் மேற்கோள் நூலாகக் காட்டப்பட்டதும் கலித் துறையிலமைந்ததுமாகிய கயாகரநிகண்டு என்னும்நூல் சேதுபதிகளுடைய இராமீச்சரமாகிய தேவைநகரத்துவேதியரும் பெரும்புலவருமாகிய கயாகரரா லியற்றப்பட்டதென்பது, அந்நூா லொவ்வொரு தொகுதி யிறுதிச் செய்யுளா னுணரப்படுவது. இத்தேவைக்கயாகரர் இராமீசர் கோவையும்பாடியவரென் பதும் உணர்ந்துகொள்க.

''ஓங்கிடபகேதனன்பற்றுமறவாததேவைக்கயாகரன்றொல்வே தியன்'' எனவும்,

''காசிபகோத்திரம்வாழவந்தோன்றென்கலைத்தமிழ்தேர்
மாசில்பெருந்தகைமாறாவதிபன்மலரயனும்
கேசவனும்புகழ்தேவை நன்னாடன்கெயாகரன்'' எனவும்

''இராமீசுரக்கோவைசொற்றகுருபரன்,, எனவும்,
அந்நூற்றொகுதியிறுதிகளில்வருதலா னறிக.

பலபட்டடைச்சொக்கநாதப்புலவர் இச்சேதுநாட்டுத் தேவையுலாப் பாடி யவர். இவ்வினியநூல் உலகம்புகழும் பெருந்தமிழாசிரியராய் இந்நல்ல வையை அலங்கரித்துவிளங்கும் நம் மஹாமஹோபாத்தியாய ஐயரவர்களால் அச்சிடப்படுள்ளது. மற்றும் இவரியற்றியது இச்சேது வேந்தர்க்கு மதிமந்தி

★ இக்கயாகர நிகண்டு இத்தமிழ்ச்சங்கத்துக் கென்னாற்றரப்பட்டுள்ளது.

ரியாயிருந்த தெய்வகன்னியென்பார்பேரில் விஞ்சைக்கோவை என்பது ஒன்றுண்டு. இதனை,

''கொல்லாதமானென்றுமீசன்கைம்மானிக்குவலயத்தில்
வெல்லாதயானைவெள்ளானையொன்றேமெய்ப்புனமகலார்
இல்லாதவீரமிவரதன்றோவினியாதவன்சொல்
கல்லாதமுத்துரகுநாதன் விஞ்சையிற்காவலரே''

''எத்திக்கும் போற்றும் ரகுநாதன் விஞ்சைக்கிருநிதியாய்
வர்த்திக்குமந்திரிமால்தெய்வகன்னிவரையிடத்தே
முத்திக்கையாற்றொட்டுக்கட்டிக்கொண்டானம்மொழிக்கு மொழி
தித்திக்கு நெஞ்சுக்குநாவுக்குங்கண்ணுக்குந்தித்திக்குமே''

என்னுங் கவிகளானுணர்க. விஞ்சையென்பது நெட்டூர். இவர் இக்கோவையரங்கேற்றிய எட்டாநாளில், தெய்வகன்னி இறந்தாராதலான், சுப்ர தீபக்கவிராயர் தெய்வகன்னிபாலுள்ள அன்பால் இக்கோவையின் ஆனந்தங் காரணமாக இறந்தாரென்று கொண்டு பலபட்டடைச்சொக்க நாதரைவெறுத்து,

''தேவைரகுநாதன் மெச்சுந்தெய்வ கன்னிமீதினிலே
கோவையென்று பில்லிவைத்துக் கொன்றாயே - பாவியுன்றன்
இட்டடைச் சொல்லார் பொறுப்பாரேண் டாமடையபல
பட்டடைச்சொக்கா முழுவம்பா''

என்று பாடினாரென்பர். இத்தெய்வ கன்னிமந்திரியே இச்சேதுபதி யரசர்கு லநிதியாய்ப்போற்றும் சீராசராசேச்வரியின் பிலிபீடத்தை ராயவேலூரினின்று கொணர்ந்தரென்பது,

''கலியாணசோமன்னநல்லேனவாருகர்த்தாக்கள்மெச்சுஞ்
சலியாமதிமந்த்ரமால்தெய்வகன்னிதன்றந்திரத்தால்
நலியாதுராயவேலூர்புகுந்தேயன்றிராத்திரியே
பலிபீடங்கொண்டுவந்தான்சேதுவாசல் பலக்கவென்றே''

என்னும் பழைய பாடலா னறியப்படுவது. இராமேசருக்குப் பொற்குத்துவி ளக்கிட்டவரும், இராமேசர்தேவையிற் சோமவாரமடங்கட்டி அதற்கு நம்பு தழை என்னும் ஊரை யளித்தவரும் இத்தெய்வகன்னி மந்திரியாரே. இவ்வாறே இச்சேதுநாட்டரசர் மந்திரியைப்பற்றிய தமிழ்ப்பாடல்கள் எண்ணிறந்தனவுள் ளன.

''வாசமலர்மடந்தைபோல்வார் வண்கானப்பே
ரீசன்றன்மக்களெழுபதின்மர் தேசத்
திரவலர்மேனீட்டுவர்கையீண்டுலகங்காக்கும்

புலவர்மேனீட்டுவர் பொற்கால்''

கணிகையரும் பொய்யாமொழியார்க்கு எழுபதினாயிரம் பொன்னளித்துத் தமிழ்ப்பாடலபெற்றசிறப்புடைய சேதுநாட்டுத் திருக்கானப்பேர்த்தலத்தையும் விஞ்சையென்னும் நெட்டூர்த்தலத்தையும் திருப்பணி செய்தவன் சேதுநாட்டுச் சேதிராயனென்னும் மந்திரியென்பதும், பாண்டியநாட்டைச் சோழர்வென்று கொண்டபோது பாண்டியன் நாடு வேண்டிவர அவனைத் தன்னகத்துச் சிறக் கவைத்துத் தாங்கினான் இச்சேது நாட்டுக் கொடுமூரிலிருந்த பெரியபிரபுவாகிய வேணாடன் என்பதும், அவனே இச்சேதுநாட்டுச் சாளைக்கிராமங்கண்டவன் என்பதும் பின்வரும் பழைய பாடல்களா னறிந்துகொள்க.

''தருக்கொளும்விண்பொழில்சூழுந்திருச்சாளையெனுமூலத்
தலத்தைக்கண்டு
வெருக்கொளும்வெம்புலிக்கடானவையெல்லாம் வேரறவே
வெட்டிச்செய்ய
தெருக்களுமாடமுங் கூடகோர்புரமுந்துாபிதிருமதிளுஞ்செய்து
திருக்குளமுங்கரைகண்டான் மந்திரியாந்திருஞானச்சேதிராயன்''

(தொடரும்...)

எல்லோர்க்கும் தொல்காப்பியம்

பேரறிஞர் நா.பாலுசாமி

சொல்லதிகாரம் வேற்றுமை இயல்

(முன் இதழ்த் தொடர்ச்சி...)

பெயர்கள் உருபுகளை ஏற்றுப் பொருள் வேறுபடும் தன்மையை விளக்கும் இயல் வேற்றுமை இயல். வேற்றுமை - பொருள் வேறுபடுதல்; இயல் - அதுபற்றிய பகுதி அல்லது பிரிவு. மரம் வளர்த்தான் - இத்தொடரில் மரம் வளர்க்கப்படும் பொருள். இரண்டாம் எடுத்துக்காட்டில் 'ஐ' என்னும் உருபு மரம் என்பதனோடு சேர்ந்து செய்யப்படும் பொருளைத் தந்துள்ளது. முதல் எடுத்துக்காட்டில் மரம் செய்பொருள். பின்னதில் மரம் செயப்படுபொருள். இவ்வாறு பெயர்கள் உருபு ஏற்றுப் பொருளை வேறுபடுத்திக் காட்டும் இயல்பினைக் கூறுவதால் இந்த இயல் வேற்றுமை இயல் எனப்பட்டது. வேற்றுமை உருபுகள் இரண்டு முதல் ஏழாம் வேற்றுமை முடிய ஆறு வகை உருபுகளாகும். முதல் வேற்றுமை எழுவாய் வேற்றுமை அல்லது கர்த்தா (வினைமுதல்) வேற்றுமை எனப்படும். இதற்குத் தனி உருபு இல்லை; இதே போன்று எட்டாம் வேற்றுமையாகிய விளி (கூப்பிடுதல்) வேற்றுமைக்கும் தனியே உருபு இல்லை. இடைப்பட்ட 2 முதல் 7 வேற்றுமைகளுக்கே உருபுகள் உண்டு. விளக்கம் தனித்தனிச் சூத்திர உரைகளில் காட்டப்படும்.

சூத்திரம் 62:

வேற்றுமை தாமே ஏழென மொழிப (வேற்றுமையின் வகை)

(ப.ரை) வேற்றுமை - பெயர்களின் பொருளை வேறுபடுத்திக் காட்டும் வேற்றுமை உருபுகள், ஏழு என - ஏழு என்று, மொழிப - இலக்கண நூலார் கூறுவர்.

தமிழில் பெயர்ப் பொருளை வேறுபடுத்திக் காட்டும் உறுப்புகளாகிய உருபுகள் எண்ணிக்கையில் ஏழாகும் என்று அறிஞர் கூறுவர்.

(வி.ரை) முதல் வேற்றுமை (உருபு இல்லாதது) எழுவாயகவே வரும். பெயர்ப் பொருள் மாறுபடாது. ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர்த்தும். எனவே ஒன்று முதல் ஏழு முடிய வேற்றுமைகள் ஏழாகும். இந்த ஏழும் சிறப்பானவை; எட்டாம் வேற்றுமை (அடுத்த சூத்திரம்) ஆகிய விளி (உருபில்லாதது) சிறப்பில்லாத வேற்றுமை. எனவே, வேற்றுமைகள் எட்டு என்று ஒரே சூத்திரத்தில் கூறாமல் இரண்டு சூத்திரங்களாகக் கூறினார் ஆசிரியர்.

(எ.டு) கந்தன் வந்தான் - இத்தொடரில் 'வந்தான்' என்பது வினைமுற்று; பயனிலை. கந்தன் எழுவாய். கந்தன் என்னும் பெயர் எந்த உருபையும் ஏற்காமலும் தன் பொருளில் வேறுபடாமலும் இருத்தலை அறியவும். இவ்வாறு பொருள் வேறுபடாது வரும் பெயர்கள் எழுவாய் வேற்றுமை அல்லது முதல் வேற்றுமை எனப்படும்.

தாமே - அசைச்சொல்; மொழிப - உயர்திணைப் பலர்பால் வினை முற்று.

சூத்திரம் 63:

விளிகொள் வதன்கண் விளியொடு எட்டே

(ப.ரை) விளி-விளித்தல் (அழைத்தல்) பொருளை, கொள்வதன் கண் - கொள்ளும் பெயரிடத்து வரும், விளியொடு - விளிவேற்றுமை யோடு கூட (முன் ஏழும்), எட்டு - வேற்றுமைகள் எட்டாகும். கூப்பிடுதல் அல்லது அழைத்தல் பொருளைத் தரவல்ல பெயர்களிடத்து அமையும் விளிவேற்றுமையைச்சேர்த்தால் வேற்றுமைகள் எட்டாகும்.

(வி.ரை) விளித்தல்கூப்பிடல். இராமன் என்பவனை இராம என்றோ இராமா என்றோ கூப்பிடும்போது இராமன் என்னும் பெயர் மாற்றம் அடைகிறது அல்லவா? இம்மாற்றத்தை உண்டுபண்ணுவது எது? முழுப் பெயர் சிறிது குறைந்து இராம என்றும், சிறிது நீண்டு இராமா

என்றும் வருதலே விளி வேற்றுமையாகும். இராம - பக்கத்தில் உள்ளபோது அழைப்பது; இராமா-தூரத்தில் உள்ளபோது. இவ்வாறு விளி என்பது அண்மை (பக்கத்தில்) விளி என்றும், சேய்மை (தூரம்) விளி என்றும் இருவகைப்படும்.

(எ.டு) இராம வா, இராமா வா, மயிலே ஆடு, குயிலே பாடு, சேவலே கூவு என இரு திணையிலும் விளித்தல் வரும்.

எனவே பெயர்ப்பொருளை மாற்றிக்காட்டும் வேற்றுமைகள் எட்டாகும்.

சூத்திரம் 64:

(வேற்றுமைகளின் பெயர்கள்)

அவைதாம்

பெயர் ஐ ஒடு கு

இன் அது கண்விளி என்னும் ஈற்ற.

(ப.ரை) அவைதாம் - மேலே கூறப்பட்ட எட்டு வேற்றுமைகளாவன, பெயர் - பெயர் வேற்றுமை ஐ - ஐ வேற்றுமை, ஒடு - ஒடு வேற்றுமை, கு - கு வேற்றுமை, இன் - இன் வேற்றுமை, அது - அது என்னும் வேற்றுமை, கண்-கண் என்னும் வேற்றுமை - விளி - விளி வேற்றுமை, என்னும் - என்று கூறப்படும், ஈற்ற முடிபினவாகும். எட்டு வேற்றுமைகளாவன - பெயர் வேற்றுமையும் ஐ வேற்றுமையும் ஒடு வேற்றுமையும் கு வேற்றுமையும் இன்வேற்றுமையும் அது வேற்றுமையும் கண் வேற்றுமையும் விளி வேற்றுமையும் ஆகிய எட்டும் ஆம்.

(வி.ரை) ஈற்ற - இறுதியில் உடையன; பன்மை வினைமுற்று, இதற்குரிய எழுவாய், பெயர் முதல் கண் முடியவுள்ள பெயர்கள். இவ்வேழு பெயர்களும் விளியை ஈற்றில் பெற்றுள்ளன என்று வாக்கியத்தை முடித்தல் வேண்டும். பெயர்... கண் வரை உள்ளன ஒரு தொடராகும். இச்சூத்திரத்தால் எட்டு வேற்றுமைகளின் பெயர்கள் கூறப்பட்டன.

ஒடு என்பதால் ஒடு என்பதும், அது என்பதால் அ என்பதும் உடன் கூடிய உருபுகளாகும். இவ்வுருபுகளை நன்னூல் ஆசிரியர் பவ

ணந்தி முனிவர் சூத்திரத்திலேயே உள்ளடக்கிக் கூறினார். விரிவு நன்னூலுள் காண்க.

சூத்திரம்: 65

(முதல் வேற்றுமை அல்லது எழுவாய் வேற்றுமை)

அவற்றுள்,

எழுவாய் வேற்றுமை பெயர்தோன்றும் நிலையே.

(ப.ரை) எழுவாய் வேற்றுமை - முதல் வேற்றுமை, பெயர் - பெயர்கள், தோன்றும் நிலை - நிற்கின்ற நிலையே ஆகும்.

எழுவாய் வேற்றுமை அல்லது முதல் வேற்றுமை என்பது பெயர்கள் மாறுபாடின்றி இருந்தவாறே இருப்பதாகும். பொருள் வேறுபடாது என்பதாம்.

(வி.ரை) எழுவாய், கர்த்தா, வினைமுதல், முதல் வேற்றுமை இவை எல்லாம் ஒரே பொருளைக் குறிப்பன என்பது அறியவும்.

(எ.டு) கண்ணன் கண்டான் - இந்த வாக்கியத்தில் கண்ணன் எழுவாய் வேற்றுமை; இப்பெயர் தோன்றியவாறே நிற்கிறது. கண்ணனை, கண்ணனால், கண்ணனுக்கு, கண்ணனின், கண்ணனது, கண்ணனிடம் கண்ணா என்று மாறினால் பெயர்ப் பொருளும் மாறு படுவதைக் காணலாம். இனிவரும் சூத்திரங்கள் இதனை மேலும் விளக்கும்.

சூத்திரம்: 66

(எழுவாய்க்கு உரிய பயனிலைகள்)

பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
வினைநிலை உரைத்தல் வினாவிற்கு ஏற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதல் என்று
அன்றி அனைத்தும் பெயர்ப்பய னிலையே

(ப.ரை) **1. பொருண்மை சுட்டல்** - ஒரு பொருள் உள்ளது எனச் சுட்டிக் கூறுதல் (எ.டு) பசு உண்டு.

2. வியன்கொள வருதல் - ஏவல் பொருள் தரும் வினைமுற்றை

ஏற்று வருதல் (எ.டு) பசு செல்க.

வியங்கோள் - ஏவல், கட்டளை; இது வேண்டுகோளாகவும் வரும்.

3. வினைநிலை உரைத்தல் - காலத்தை வெளிப்படையாகக் காட்டும் வினைமுற்றைப் பெறுதல் (எ.டு) பசு உறங்கியது, சாத்தான் வந்தான் நான் வருவேன். இவ்வாறு வினைமுற்றுக்கள் காலம் காட்டும்.

4. வினாவிற்கு ஏற்றல் - வினாப் பெயரைப் பயனிலையாக ஏற்று வருதல். (எ.டு) நீ யார்? பெயர் யாது? என வரும்.

5. பண்பு கொள வருதல் - குணத்தை அல்லது இயல்பினைச் சுட்டிக்காட்டிக் குறிப்பு வினைமுற்றாக வருதல். (எ.டு) கண்ணன் இனியன், எருமை கரிது என வரும்.

இங்கு, இனியன், கரிது ஆகிய வினைமுற்றுக்கள் இன்னகாலம் என்பதனை வெளிப்படையாக உணர்த்தாமல் குறிப்பாக உணர்த்தியவாறு அறிக. இவ்வாறு வருவன குறிப்பு வினை முற்றுக்கள். கரிது, இனியன் இவை பண்பை உணர்த்தி வந்த குறிப்பு வினைகள்.

6. பெயர்கொள வருதல் - மற்றொரு பெயர்ச்சொல்லையே வினையாக (பயனியாக)க் கொள்ளுதல். (எ.டு) பசுக்கள் பல, அவன் கண்ணன், கோவிந்தன் அவன் என வரும். பல, கண்ணன், அவன் என்பன பெயர்ச்சொற்கள். ஆனால் இங்கு வினை முற்றுகளாக வந்தன.

அன்றி அனைத்தும் - இவையே அன்றி, இவை போன்ற பிற எல்லாம், பெயர்ப் பயனிலை - பெயர் (எழுவாய்) ஏற்கும் பயனிலையாகும்.

பொருண்மை சுட்டல் முதல் பெயர்கொள வருதல் ஈறாக உள்ள ஆறுவகைப் பயனிலைகளையும், அவை போன்ற பிறவற்றையும் எழுவாய் வேற்றுமை (பெயர்) பயனிலைகளாக ஏற்கும்.

(வி.ரை) பயனிலை வாக்கியத்தில் பொருளை முற்றுவிக்கும் வினை முற்றாம். பொருண்மை - பொருளாம் தன்மை; பொருள் அன்று. (எ.டு) 'பசு உண்டு' என்னும் தொடரில் வரும் பசு என்பது ஒரு பசுமாட்டைக் குறித்தாலும், உண்மையில் அது பசுவாகிய பொருளைக் குறிக்காமல் பசுவாகிய தன்மையைச் (பசுத்தன்மை) சுட்டுவதாகும். பசு இறக்கும் தன்மையது அல்லது அழியக் கூடிய பொருள்; ஆனால் பசுவாகிய தன்மை அல்லது பண்பு எப்பொழுதும் நிலைத்து நிற்பதாகும். பசு பொய்ப்பொருள்; பசுவாம் தன்மை

மெய்ப்பொருள். இங்குப் பொருண்மை என்பது மெய்ப்பொருளாகிய பசுத்தன்மையைச் சுட்டி நிற்பதாகும்.

வினைநிலை - வினைச்சொல்லின் இலக்கணமாகிய காலம் காட்டும் தன்மை (இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்). வினைச்சொல் காலம் காட்டும். வியங்கோள் கட்டளைப் பொருளிலும் வேண்டுதல் பொருளிலும் வரும் வினைமுற்றாம் - செல்க - கட்டளைப் பொருள் தரும் வியங்கோள் வினைமுற்று; வாழ்க - வாழ்த்துதல் பொருள் தரும் வியங்கோள்; வருக - வேண்டுதல் பொருள் தருவது.

எடுத்துக்காட்டுகள் பதவுரையில் தரப்பட்டன.

சூத்திரம்: 67

(தொகைப்பெயர்)

பெயரின் ஆகிய தொகையுமா ருளவே
அவ்வும் உரிய அப்பாலான

(ப-ரை) பெயரின் ஆகிய - பெயரும் பெயரும் சேர்ந்து வரும், தொகையும் உள-தொகைப் பெயர்களும் உள்ளன. அவ்வும் - அத்தொகைப் பெயர்களும், அப்பாலான - அத்தகைய வினைமுற்றுகளைக் கொள்ள, உள - உரிமை உடையனவாம்.

பெயரோடு பெயர் சேர்ந்து வரும் தொகைப்பெயர்களும் மேற்கூறியவாறு போல வினைமுற்றுக்களைப் பயனிலைகளாகக் கொள்ள உரிமை உடையனவாம்.

(வி-ரை) அவ்வும் (அ+உம்) =அவையும். யானை - பெயர்; கொம்பு - பெயர்; யானைக்கொம்பு (யானையினது கொம்பு) தொகைப்பெயர். யானைக்கொம்பு கிடந்தது இத்தொடரில் யானைக்கொம்பு தொகைப்பெயர்; கிடந்தது - வினைமுற்று. யானை கிடந்தது என்றும் கொம்பு கிடந்தது என்றும் பெயர்கள் பயனிலைகளைக் கொள்வதுபோல், யானைக்கொம்பு என்ற தொகைப்பெயரும் கிடந்தது என்று பயனிலை பெற்றது.

(எ.டு) மேலே கூறியபடி இன்னு சில: பாண்டியன் முதுகுடுமிப் பெரு வழுதி வென்றான் என்ற வாக்கியத்தில், பாண்டியன், முதுகுடுமி, பெருவழுதி ஆகிய மூன்று பெயர்கள் தொக்கு (சேர்ந்து) ஒரு பெய ராகி வென்றான் என்னும் பயனிலை பெற்றது.

சூத்திரம்: 68

(தோன்றா எழுவாய்)

எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி

அவ்வியல் நிலையில் செவ்விது என்ப

(ப.ரை) எவ்வியன் - மூன்றிடத்தும் வரும், பெயரும் - எழுவாயும் வெளிப் படத் தோன்றி - கண்ணுக்கும் காதுக்கும் வெளிப்படையாக நின்று, அவ்வியல் நிலையல் - முன்னர்க் கூறியவாறு பயனிலைகளைக் கொள்ளுதல், செவ்விது என்ப - சிறந்தது என்பர் அறிஞர்.

தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்றிடத்தும் பொருந்திய எழுவாய் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் விளக்கமாக நின்று, முன் கூறப்பட்டபடிப் பயனிலைகளை ஏற்றுவருதல் சிறப்பாகும். அவ்வாறு விளங்கத் தோன்றாது எழுவாய் உய்த்துணரப்படின், அது சிறப்புடையது அன்றாம்.

(வி.ரை) வயின் - இடம் (தன்மை, முன்னிலை, படர்க்கை) பெயர் எழுவாய் வெளிப்படத் தோன்றல் எழுவாய் வாக்கியத்தில் வெளிப்படையாக நிற்றல், அவ்வியல் (அ+இயல்) மேற்கூறிய இலக்கணமாகிய பய னிலையை ஏற்றல், செவ்விது - சிறந்தது. இது சிறந்தது என்றதனால் தோன்றா எழுவாயாக (எழுவாய் மறைந்து நிற்றல்) வருதல் அவ்வ ளவு சிறப்புடையது அன்று என்பதாம்.

(எ.டு) நீ வா - இதில் நீ எழுவாய்; வா - பயனிலை. வா என்று மட்டும் நின்றால், நீ என்பது - தோன்றா எழுவாய்; அஃதாவது எழுவாயை

வருவித்துக் கொள்ள வேண்டும். இது சிறப்பில்லை என்பதாகும். எழுவாய் வெளிப்படையாக இல்லாமல் பயனிலை (வினைமுற்று) மட்டும் நின்று ஒரு வாக்கியம் ஆகலாம்.

சூத்திரம் : 69

(உருபு நிற்கும் இடம்)

கூறிய முறையின் உருபுநிலை திரியாது

ஈறு பெயர்க்காகும் இயற்கைய என்ப.

(ப.ரை) கூறிய முறையில் - மேலே கூறப்பட்ட முறைப்படி, உருபு, பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்னும் உருபுகள், நிலை திரியாது - தம் தன்மை மாறாது, பெயர்க்கு - பெயர்களுக்கு, ஈறு ஆகும் - ஈற்றில் நிற்கும் இயற்கைய என்ப - இயல்பினை உடைய என்பர் அறிஞர்.

(வி-ரை) கூறியமுறை - உருபுகள் கூறப்பட்டமுறை: அஃதாவது, பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்ற வரிசை. ஈறு - சொல்லின் கடைசியில் - இயற்கைய இயல்பின; பன்மைக்குறிப்பு வினை முற்று; உருபு எழுவாய். முதல் (எழுவாய்) வேற்றுமையாகிய பெயர் தொடங்கி ஏழாம் உருபாகிய கண் முடிய உள்ள வேற்றுமை உரு புகள் பெயருக்குப் பின்னால் நின்று, பெயரின் பொருளை வேறு படுத்தும். இவ்வாறு உருபுகள் நிற்கும் இடம் கூறப்பட்டது.

(எ-டு) கந்தன் வந்தான் - எழுவாய் வேற்றுமை (திரிபில்லாத பெயர்) கந்தனை (கந்தன் +ஐ); இரண்டாம் வேற்றுமை உருபாகிய 'ஐ' கந்தன் என்னும் பெயரின் கடைசியில் நின்றது அறிக. இவ்வாறே பிற உருபுகளும் நிற்கும்.

சூத்திரம் : 70

(பெயரின் தன்மை)

பெயர்நிலைக் கிளவி காலம் தோன்றா

தொழில்நிலை ஒட்டும் ஒன்றலம் கடையே.

(ப-ரை) பெயர்நிலைக்கிளவி - பெயர்ச்சொற்கள், தொழில் நிலை - வினைச் சொல்லானது, ஒட்டு - தொடர்பினை, ஒன்று அல் கடை - பெறா தபோது, காலம் - காலத்தை, தோன்றா- தோற்றுவிக்கா (காட்டா).

பெயர்ச் சொற்கள், வினைச் சொல்லின் தன்மையைப் பெறாத விடத்துக் காலம் காட்டா. அஃதாவது எந்தப் பெயர்ச் சொல்லும் (ஒரு பொருளைக் குறிக்கும் பெயர்ச்சொல்) இறந்தகாலம், நிகழ் காலம், எதிர் (வரும்)காலம் ஆகியவற்றுள் எக்காலத்தையும் காட்டாது. ஆனால் வினைச் சொற்கள் காலம் காட்டும். இச் சூத்தி ரத்தின் பொருள் இதுவே.

(வி.ரை) பெயர்ச்சொல் என்று கூறாது பெயர்நிலைக் கிளவி என்று ஏன் கூற வேண்டும்? பெயர் நிலையாவது பொருளின் தன்மையைச் சுட்டும் பெயர்சொல்லாம். அஃதாவது ஒருபொருளைச் சுட்டி நிற்கும் பெயர்ச்சொல். வினைச்சொல் என்று கூறாது, வினை நிலை ஒட்டு என்றது வினைச் சொல்லின் இயல்பாகிய காலம் காட்டு தலோடு பொருந்தி வரும் வினைமுற்று என்பதாம்.

கண்ணன், அணில், கல், மரம் - பெயர்ச் சொற்கள். இவை பொருள் களின் பெயர்களைக் குறிப்பனவாம். இவை போன்ற பெயர்ச்சொற் களில் காலம் தோன்றாது என்பது வெளிப்படை. தின்றான், உண்கிறான், வருவான் என்பன முறையே இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் காட்டும். வினைமுற்றுக்கள். இவ்வாறு காலம் காட்டி நிற்பன எல்லாம் வினைச் சொற்களாம். இவ்வினை முற்றுக் களாகிய தின்றான், உண்கிறான், வருவான் என்பன தின்றவன், உண்கிறவன், வருபவன் எனப் பெயர்களின் நிலையைப் பெற்று வினையாலணையும் பெயர்களாக வந்தால் அவை காலம் காட்டும். தொழில் நிலை ஒட்டு. வினையாலணையும் பெயர், வினை முற்றே அன், ஆன் என்ற ஆண்பால் விகுதிகளைப் பெறும்போது பெயர் களாகி விடுகின்றன. இவ்வாறே அஃறிணைக்கும் கொள்ளலாம்.

இங்கு எழுவாய் வேற்றுமையின் இயல்பினைக்கூற வந்த தொல்காப் பியர் அதனோடு தொடர்புடைய பெயரினது காலம் காட்டாத இயல் பினையும் உடன் சேர்ந்துக் கூறினார் என்பது அறியவும்.

(எ.டு) விளக்கவுரையில் காட்டப்பெற்ற எடுத்துக்காட்டுகளே போதுமா னவை.

(இரண்டாம் வேற்றுமை உருபு)

இரண்டாகுவதே
ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்பு
அவ்விரு முதலில் தோன்றும் அதுவே.

(ப.ரை) ஐ எனப் பெயரிய - ஐ என்னும் பெயரையுடைய வேற்றுமைக் கிளவி - வேற்றுமை உருபு - இரண்டாகுவது இரண்டாம் வேற்றுமை உருபாம். எவ்வழிவரினும் - அவ்வுருபு எந்த இடத்தில் வந்தாலும் - வினை - தெரிநிலை வினைமுற்றும், வினைக்குறிப்பு - குறிப்பு வினைமுற்றும் ஆகிய, அ இரு முதலில் - அவ்விரண்டுக்கும் காரணமான செயப்படுபொருளில், அது தோன்றும் - அவ்விரண்டாம் வேற்றுமை உருபு வரும். ஏ - அசை.

இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ' என்பதாம். அது செயப்படுபொருளில் வரும். அவ்வாறு வரும்போது தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்றின் காரணமாக வரும்.

(வி.ரை) பெயரிய - பெயரை உடைய கிளவி. உருபு எவ்வழி - எங்கும். தெரிநிலை வினைமுற்று காலத்தை வெளிப்படையாகக் காட்டும். குறிப்பு வினைமுற்று குறிப்பாகக் காட்டும். வந்தான், கண்டான் - தெரிநிலை வினைமுற்றுக்கள்; இவை இறந்தகாலத்தை வெளிப்படையாக உணர்த்துகின்றன. பெரியன், அரிது - இவை குறிப்பு வினைமுற்றுக்கள்; காலத்தைக் கூறுவோன் குறிப்பின்வழிக் (கருத்து) காட்டும். நேற்றுப் பெரியன், இன்று பெரியன் எனக் கூறுவோன் எந்தக் காலத்தை மனத்தில் கருதிக் கூறுகிறானோ அந்தக் காலத்தை உணர்த்தும்; அரிது என்பதுவும் அவ்வாறே.

(எ.டு) குடத்தை (குடம் + ஐ) வனைந்தான்; பொன்ன உடையன். இங்கு 'வனைந்தான்' தெரிநிலை வினைமுற்று; 'உடையன்' குறிப்பு வினைமுற்று. குடம் செய்யப்படுபொருள். இவ்வாறு இரண்டாம் வேற்றுமை உருபாகிய 'ஐ' என்பது செயப்படுபொருளையே தரும்.

சூத்திரம்: 72

('ஐ' வேற்றுமையின் பொருள் பகுபாடு)

காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்
ஒப்பின் புகழின் பழியின் என்றா
பெறலின் இழவின் காதலின் வெகுளியின்
செறலின் உவத்தலின் கற்பின் என்றா
அறுத்தலின் குறைத்தலின் தொகுத்தலின் பிரித்தலின்
நிறுத்தலின் அளவின் எண்ணின் என்றா
ஆக்கலின் சார்தலின் செலவின் கன்றலின்
நோக்கலின் அஞ்சலின் சிதைப்பின் என்றா
அன்ன பிறவும் அம்முதற் பொருள
என்ன கிளவியும் அதன்பால என்மனார்.

(ப.ரை) காப்பு - காத்தல், ஒப்பு - ஒப்பிடல், ஊர்தி - ஊர்தல், இழை - இழைத்தல் அல்லது இயற்றுதல், ஒப்பு - ஓச்சுதல் அல்லது வெளியேற்றல், புகழ் - புகழ்தல், பழி - பழித்துக் கூறல், என்றா - என்றும், பெறல் - பெறுதல், இழவு - இழத்தல், காதல் - அன்பு அல்லது விருப்பம், வெகுளி - கோபம், செறல் - சினத்தால் விலக்குதல், உவத்தல் - மகிழ்தல், கற்பு - கற்றல், என்றா - என்றும், அறுத்தல் - நீக்குதல், குறைத்தல் - குறைப்பது, தொகுத்தல் - தொத்துக் கூறல், பிரித்தல் - பிரித்து வைப்பது, நிறுத்தல் - நிறுவை, அளவு - அளத்தல், எண் - எண்ணுதல் (எண்ணிக்கை) என்றா - என்றும், ஆக்கல் - உண்டாக்கல், சார்தல் - சார்ந்திருத்தல் அல்லது பற்றுதல், செலவு - செல்லுதல், கன்றல் - வெறுத்தல், நோக்கல் - கருதுதல், அஞ்சல் - பயப்படல், சிதைப்பு - சிதைத்தல், என்றா - என்றும், அன்ன பிறவும் - அவை போன்ற மற்றவையும், அம்முதற் பொருள் - அச்செயல்படுபொருளை உடையனவாம், என்னகிளவியும் - இங்குக் கூறப்பட்ட எல்லா வாய்பாட்டுச் சொற்களும் அதன்பால்- இரண்டாம் வேற்றுமையின்பால் பட்டன, என்மனார் - என்று கூறுவர் ஆசிரியர்.

பத்தெட்டு வாய்பாடுகளும், அவைபோன்ற பிறவும் செயப்படு பொருளின்மேல் வரும் எல்லாச் சொற்களும் இரண்டாம் வேற்று மைக்குரியன எனக் கூறுவர் ஆசிரியர்.

(வி.ரை) இரண்டாம் வேற்றுமைக்குச் செயப்படுபொருளே பொருள் என்பது கண்டோம். காப்பு முதல் சிதைப்பு முடிய இச்சூத்திரத்தில் கூறப் பட்ட 28 பொருள்களின் வகைப்பாடுகள் மூன்று பிரிவுகளில் அடக் கப்படும். இச்சூத்திரத்தில் என்றா என்னும் எண்ணுப் பொருள் தரும் எண் இடைச்சொல் மூன்று இடங்களில் வந்துள்ளது. அது முப்பெரும் பிரிவுகளை உணர்த்தும். அவையாவன: இயற்றப்படு வது, வேறுபடுத்தப்படுவது, எய்தப்படுவது. முன்பு இல்லாத ஒன்றை உண்டாக்குவது இயற்றப்படுவதாகும். முன்பு இருப் பதனைத் திரித்துரைத்தல் வேறுபடுத்துவதாகும். இயற்றுவதும் வேறுபடுத்துவதும் இல்லாது தொழில் பயனுறும் துணையாய் நிற்றல் எய்தப்படுவதாகும்.

(எ.டு) 1. கோட்டையை எழுப்பினான் - இது இயற்றப்படுவது (இழை)

2. கிளியை ஒப்பும் (விரட்டும்), மரத்தைக் குறைக்கும்,வேலியைப் பிரிக்கும் - வேறுபடுக்கப்படுவது.

3. ஊரைக்காக்கும், மனைவியைக்காதலிக்கும், புதல்வரைப் பெறும் எய்தப்படுவது. இவ்வாறு தொல்காப்பியர் இரண்டாம் வேற்றுமை உருபாகிய 'ஐ' என்பது எவ்வெப்பொருள்களில் வரும் என்பதனை மிகவும் விரிவாக விளக்கியிருப்பது அறிந்து வியக்கத்தகும்.

(தொடரும்...)

காப்பு முதல் சிதைப்பு முடிய இச்சூத்திரத்தில் கூறப்பட்ட இரு

அபிராமி அந்தாதி

ABIRAMI ANTHATHI

பேரறிஞர் அ.தட்சிணாமூர்த்தி

அரணம் பொருளென் றருளொன் றிலாத வசுரர்தங்கள்
முரணன் றழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே
சரணம் சரண மெனநின்ற நாயகிதன் அடியார்
மரணம் பிறவி யிரண்டுமெய் தாரிந்த மாநிலத்தே

Lord Shiva once with anger destroyed
The threefold castle of the merciless Asuras
Who held their forts in high esteem;
That Lord and Lord Vishnu ever seek assylum
In Abirami's sacred feet;
Her humble survants on this earth
Will Conquor birth and death

(51)

!வையம் துரகம் மதகரி மரமகு டம்சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை யாரம் பிறைமுடித்த
ஐயன் திருமனை யாளடித் தாமரைக்கு அன்புமுன்பு
செய்யும் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்களே!

Chariots, steeds, ichorus elephants, lofty crowns
Pallenquins, tribute of gold and costly garlands

Are the insignia, with which are blessed those fortunate souls,
Who worshipped in their previous births
The sacred feet of the beauteous spouse
of Lord Shiva, Whose matted hair is adorned with crescent moon!

(52)

சின்னஞ் சிறிய மருங்கினில் சாத்திய செய்ய பட்டும்
பென்னம் பெரிய முலையுமுத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங்கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில் வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலும் தவமில்லையே!

There is no a better tapas for the seers
Than to contemplate in absolute solitude
Abirami's silk graments worn around Her narrow waist,
Her triple eyes, heavy pair of breasts with garlands of pearls
And Her thickly dark tresses, fragrant with the pichi blossoms!

(53)

இல்லாமை சொல்லி யொருவர்தம் பாற்சென் றிழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவி ரேல்நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பாலொரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

Oh men! If you wish for a life in which
You need not approach others and speak out
Your poverty staking all your honour,
Seek refuge in the feet of Abirami
Who blessed me with a life of not seeking
The help of those mean folks
Who have not learnt the art of performing tapas each day.

(54)

மின்னா யிரமொரு மெய்வடி வாகி விளங்குகின்ற
அன்னா ளகமகிழ் ஆனந்த வல்லி அருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்வி தன்னை
உன்னா தொழியினு முன்னினும் வேண்டுவ தொன்றில்லையே!

Abirami's sacred body glows like a thousand lightning flashes put together!

She is the Liana of bliss who is the cause for Her Devotees's happiness!
The omnipresent One is the base, middle and the end of the sacred Vedas
That are rare to comprehend!
It is nothing for her, if we worship her or not!

(55)

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்திவ் வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கிநிற் பாளென்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வாகிப் பொருளறிவார்
அன்றால் இலையில் துயின்றபெம் மானுமென் ஐயனுமே!

She budded as One and blossomed into many
And became omnipresent!
Yet She stands beyond all things!
It is a wonder that She abides for ever
Into mine heart and does everthing!
This truth is known only to Lard Shiva
And Vishnu, who in day of yore
Slept on a banyan leaf!

(56)

ஐயன் அளந்த படியிரு நாழிகொண் டண்டமெல்லா
உய்ய வறஞ்செய்யும் உன்னையும் போற்றி ஒருவர் தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை யும்கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்பவைத் தாயிது வோவுன்றன் மெய்யருளே!

Thou art the One performing the dharma
Of feeding the myriad lives of the universe
with the two measures of grains
which the Lord bestowed on Thee!
Besides causing me sing The glory,
Thou caused me sing the glory,
Both true and false, of the mortals too
In chaste and perfect Tamil Songs!
Is this Thy true grace showered on me Oh Abirami!

(57)

அருணாம் புயத்தும் என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்

தருணாம் புயமுலைத் தையல்நல் லாள்தகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்
சரணாம் புயம்மல் லால்கண்டி லேனொரு தஞ்சமுமே!

I've no other refuge but the Celestial Mother
Of lotus like breasts, who abides
In the ruddy lotus flower as well as my lotus like heart
And whose comely and merciful eyes, face, hands and feet too are verily lotus flowers!

(58)

தஞ்சம் பிறிதில்லை ஈதல்ல தென்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றி லேனொற்றை நீள்சிலையும்
அஞ்சம் புமிக்க லராகநின் றாயறி யாரெனினும்
பஞ்சஞ்சும் மெல்லடி யாரடி யார்பெற்ற பாலரையே!

Oh Mother with They long and peerless sugar can bow and five flower darts!
I've failed to realize that Thou art the only refuge to me';
I've failed too to train my mind in the path of worship and penance!
Soft - footed mothers would not punish their kids
In spite of their being ignorant!

(59)

பாலினும் சொல்லினி யாய்பணி மாமலர்ப் பாதம் வைக்க
மாலினும் தேவர் வணங்கநின் றோன்கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடுமெய்ப் பீடமொரு
நாலினும் சாலநன் றோவடி யேன்முடை நாய்த்தலையே!

Oh Abirami Thy words far sweeter than milk!
For Thee to place Thy cool and flowety feet
Do you esteem the stinking head of this mean dog
More than the top of them matted hair adorned with Konraj flowers
Of the Lord, whom Vishnu and other gods worship with devotion?
Do Thou esteem it more than the four Pranava peetahs
Whom the Vedas glorify standing below!

(60)

(தொடரும்)

பாடுபொருள் நோக்கில்

ஒப்பாய்வுக் களங்கள்

பேரறிஞர் கதிர்.மகாதேவன்

(முன் இதழ்த் தொடர்ச்சி...)

இக்கருத்தை நிலைநாட்டவே, கிரேக்கர் இளமை எனும் இன்ப வளமைக்கு முதலிடம் தந்து, வளமை நலம் பெறப் பொருளுக்கு இரண்டாம் இடம் நல்கி, அப்பொருள் அறத்தின் வழி ஈட்டப்பட்டதாக இருக்கவேண்டும் என்று கூறும் பாங்கு காதற் பாடுபொருள் கொள்கை என்பது அறிந்து மகிழ்தற்குரியது.

இதனையே தொல்காப்பியர் காதற் களவொழுக்கத்தின்கண் பாடுபொருட் கொள்கையாகக் கொண்டுள்ளார்.

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டம் காணுங் காலை
மறையோர் தேயத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்லியாழ்த் துணைமையோர் இயல்பே"

-தொல். களவு. நூற். 1

தொல்காப்பியர் காதற் பாடுபொருட் கொள்கையை ஒப்பிடக் காந்தருவ

மணத்தைத் தேர்ந்தெடுக்கக் காரணம் யாது? பிரமம், பிரசாபத்தியம் ஆரிடம், தெய்வம், ஆசுரம், அரக்கம், பைசாசம் என்பவை பொருளையும் வலிமையையும் அடிப்படையாகக் கொண்டவை. ஆண், பெண் இளமை வளமைக் கருத்தொருமித்த இன்பத்தை அடிப்படையாகக் கொண்டது காந்தருவம்.

பொருள் நோக்கும் மணமும்

காந்தருவமும் களவொழுக்கமும் ஒன்றின் ஒன்று ஒருபுடை ஒப்புமை உடையன. அதற்குக் காரணம் அடுப்போரும் கொடுப்போருமின்றித் தம்முள் கூடும் சிறப்பு களவொழுக்கத்திற்கும், அவ்வாறு கூடிப் பிரியும் சிறப்பு காந்தருவத்திற்கும் உண்டு என்று உரையாசிரியர் கூறிச் சென்றனர். இக்கருத்துத் தவறில்லை. எனினும் பிற ஆரிய மணங்களில் பொருள் நோக்கு (Dowry system) இருந்தது. ஆனால், காந்தருவ மணத்தில் பொருள் நோக்கு இருக்க வழியில்லை. காந்தருவத்தைத் தவிர, பிற ஏழுவகை மணங்களிலும் திருமணத்திற்குப் பின்னர்ப் பொருள்வயிற் பாலை வழிப்பிரிதல் என்ற காதற் பாடுபொருள் மரபு அங்கு இல்லை. ஏனெனில், பெண்ணுடன் பொருளும் வருகிறது.

பழந்தமிழ்க் காதல் பாடல்களில் குறிஞ்சியைத் தவிரப் பிற திணைகள் எல்லாம் பிரிவுகள். ஒவ்வொரு திணைப் பிரிவிற்கும் வேறுபாடு உண்டு. காதலை மிகுவிக்கும் பிரிவு முல்லைப் பிரிவாகும். ''எதிர்பார்க்கும் தன்மை (Loneliness inexpectation) காதலை மிகுவிக்கும் என்ற தத்துவம் முல்லைத் திணையில் மெய்யாகிறது.

காதலர் பிரிவு ஒவ்றெனக் கருதியதால் வடவர் நெறியில் சம்போகம், பிப்பரலம்பம் என்று காதல் பாடுபொருட் கொள்கையை இருகூறாகப் பிரித்தனர்.

காதலுக்கு முதலிடமா? மூன்றாமிடமா?

'தர்மார்த்த காம மோட்சம்' என்ற முறைவைப்புப் பாடுபொருட் கொள்கை சங்க காலத்தில் இல்லை.

இக்கொள்கையைப் பார்க்கும்போது, திறக்குறள் காமத்துப்பால் வைப்பு முறையில் முதலில் இடம் பெறவேண்டும். இல்வாழ்க்கையை முதலில் கூறிப் பின்னரா களவுக் காதலைப் பாடுவது?

வள்ளுவர், 'தர்மார்த்த காம மோட்சத்'தைப் பின்பற்றவில்லை. வடமொழி வருணாச்சிரம தருமத்தை வலிந்து குறளில் புகுத்த முயலும் பரிமேலழகரும் 'வீடு'' என்னும் மோட்சம் குறளில் குறிப்பாலும் சுட்டப்பெறவில்லையே என்று ஏங்குகிறார். இதனால், வள்ளுவரை வடவர்நெறிக்கு வரவழைக்கத் திட்டமிட்டு, உரைப்பாயிரத்தில், ''இந்திரன் முதலிய இறைவர் பதங்களும் அந்தமிலின்பத்தழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரால் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம், பொருள்,

இன்பம், வீடென்பன. அவற்றுள் வீடென்பது சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக்கண வகையாற் கூறப்படாமையின் நூல்களாற் ஏனை மூன்றுமேயாம்'' என்று வள்ளுவர் வீட்டினைச் சுட்டவில்லை என்பதைக் கூறாமல் கூறுகிறார்.

'பழந்தமிழ் மரபில் இன்பம் முதலிடம் பெற
வடநூல் மரபில் தருமம் முதலிடம் பெறுகிறது.
பழந்தமிழில் 'பொருள்' இரண்டாம் இடத்தைப்
பெறுவதைப் போலவே 'அர்த்தம்' அங்கு இரண்டாம்
இடத்தைப் பிடிக்கிறது. 'அறம்' பழந்தமிழில்
மூன்றாம் இடத்தில் உளது. மனிதன் இன்பத்தை
முறையாக நாடுவதும் தேடுவதும் இயற்கை
இன்பம் நிலைபெறப்பொருளை ஈட்ட
எண்ணுகிறான், ஏனெனில், பொருள் இன்றேல்,
இன்பம் நிலைக்காது, அறம் அழியும்'.

காதற் பாடுபொருள் வளர்ச்சி

இலக்கிய வகைகள் உலகம் முழுவதும் ஒரே மாதிரியான வளர்ச்சி நிலை அடைந்துள்ளனவா? என்று கேட்டால், இல்லை என்றே கூறவேண்டும். வளர்ச்சி நிலையில் இலக்கிய வகை (Genre) வேறுபட்டாலும், பாடுபொருளில் ஒருமைப்பாடு காணப்படுகிறது.

கிரேக்க நாட்டில் இலக்கியங்களைக் காப்பியம், தன்னுணர்ச்சிப்பா, நாடகம் என முப்பெரும் வளர்ச்சி நிலை வகைகளாகப் பிரிப்பர். ஆனால் பழந்தமிழில் காதலுணர்ச்சி பாவளர்ச்சி நிலையில் முதலிடம் பெறுகிறது.

அதில் தன்னுணர்ச்சிக் காதற் பாடல்கள் உள்ளன. அக்காதற் பாடல்களே நாடக முன்னிலைப் பாடல்களாக (Dramatic monologes) உள்ளன. பழந்தமிழ் இலக்கியம் அகம், புறம் என்று பிரிக்கப்படுவதால் அகப்பாடல்களை இனவுணர்ச்சிக் காதல் பாடல்கள் என்றும் புறப்பாடல்களைத் தன்னுணர்ச்சிப் பாடல்கள் (Lyrics) என்றும் பிரிக்கலாம்.

மேலைநாட்டில் தன்னுணர்ச்சிப் பாவகையில் உட்பிரிவாகக் காதல் தன்னுணர்ச்சிப் பாக்களைப் (Love lyrics) பாகுபடுத்துவர். பழந்தமிழில் அகப்பாடல்கள் அனைத்தும் புலவர்தம் சொந்த வாழ்வில் ஏற்பட்ட காதல் அனுபவ உணர்ச்சிகளின் வெளிப்பாடு என்று எண்ணுவது பொருத்தமற்றதாகும். மேலைநாட்டில் கீட்ஸ், ஷெல்லி, பெர்ன்சு முதலிய புலவர்கள் பாடிய காதல் தன்னுணர்ச்சிப் பாடல்கள் பெரிதும் அவர்தம் சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட காதல் அனுபவங்களின் அடிப்படையில் தோன்றியவை. தமிழில் அகத்திணைப்

பாடல்கள் அத்தன்மையன அல்ல. எடுத்துக்காட்டாக, ஆரிய அரசன்பிரகதத் தனுக்குத் தமிழ் அறிவுத்தக் கபிலர் பாடிய 'குறிஞ்சிப் பாட்டு' ஒரு சிறந்த காதல் அகப்பாடல் ஆகும். இப்பாடலைக் கபிலர்தம் வாழ்க்கையில் எதிரொலி எனின் தவன்றோ! கபிலருகு மலைக் காதலும், மலர்க்காதலும் உண்டு. கபிலர் பாடிய அகப்புறப்பாடல்களால் இதனை அறியலாம்.

எனவே, அகத்திணைப் பாடல்கள், உலகிற்குப் பழந்தமிழர் பண்பாட்டுக் காதல் இனவுணர்ச்சியைக் காட்டுவன.

காதல், பொதுவாக மேன்மையான மனிதப் பண்பினைக் காட்டும். ஆண், பெண் உண்மைக் காதல் உயர் மனிதப் பண்பினைச் சுட்டும். ஆனால், காதல் இது என உணர்ந்து, அதன் உயர்நிலையைப் போற்றுபவர் மிகச் சிலரே ஆவர். இதனாலன்றோ, வள்ளுவர்,

''மலரினும் மெல்லிது காமம், சிலரதன்
செவ்வி தலைப்படு வார்''

என்று காதலைப் பாடுகிறார்.

மேலைநாட்டில் தொன்ம வகைமையாய்க் காப்பியக் காதல் முதலில் தோன்ற, பழந்தமிழில் முதல் வகையாய்க் காதல் பாடல்கள் உருவாகப் பல காரணங்கள் உள.

தொடக்க கால முதலே, கிரேக்க நாட்டில் கடவுளின் அவதாரங்கள் விண்ணு லகினின்று இழிந்து மண்ணுலகில் அற்புதங்கள் நிகழ்த்த வந்தவை என்ற தொன்மக் கரு (mythical theme) மலிந்து காணப்படுகிறது. மன்னர்களும் மாவீரர்களும் தெய்வங்களின் நேரடி வாரிசாகக் கருதப்பட்டனர்.

ஆனால், பழந்தமிழர்களோ, திணைநிலைத் தெய்வங்களை இயற்கையின் வடிவாகவும், வார்ப்பாகவும் கருதினர். சங்க காலத்தில் புராணங்களின் வண்ண மெருகு திணைநிலைத் தெய்வங்களுக்கு ஏற்றப்படாத காலம், அவதாரம் என்று மாமன்னனோ, மாவீரனோ ஏற்றிப் போற்றப்படாத காலம், இயற்கை இகந்த நிகழ்ச்சிகளைக் கற்பனை உத்திகளாகக் கொண்டு விரித்துப் பாடாத காலம், இறந்தபின் பிறிதொரு துறக்க உலகிற்குச் செல்வர் என்று எண்ணிய காலமே தவிர விண்ணுலகினின்று மண்ணுலகிற்குக் கடவுளர் அவதாரமாய் இழிந்து வருவதாய்க் கற்பனை செய்யாத காலம்!

மனித உணர்வுகளை மையமாக வைத்து

மனிதர்களை மனிதர்களாக மதித்த பழந்தமிழர் சூழலில் அகப்பாடல்களும் தன்னுணர்ச்சிகளைப் புலப்படுத்தப் புறப்பாடல்களும் தோன்றின. கடவுளரின் பிள்ளைகளாகவும் வாரிசாகவும் கருதிய கிரேக்கப் பெருங்குடியினரின்

தொடக்க கால இலக்கியங்களில் 'காப்பியங்கள்' எனும் வகை காதலை வளர்க்கும் அடிக்கருத்து உடையவனாகக் காணப்பட்டன.

தமிழில் சிறந்த காதற் காப்பியங்கள் துறவிகளால் அன்றோ எழுதப்பட்டன? ''மாசறு பொன்னே! வலம்புரி முத்தே! காசறு விரையே! கரும்பே! தேனே!'' என்று கோவலன் கண்ணகியை நோக்கிக் காதல் மொழி கூறுமாறு படைத்தவர் துறவியாம் இளங்கோவடிகள் ஆவார். தவவுருத் தாங்கிய திருத்தக்க தேவர் மணநூல் எனப் போற்றப்படும் சீவகசிந்தாமணியைக் காதல் காப்பியமாகப் படைத்தார். இவ்வகையில் தமிழின் அணியாக விளங்கும் மணிமேகலை பௌத்தத் துறவியால் எழுதப்பட்டது. எனவே, காதற் சுவை பொருந்திய பாடல்களை அச்சுவையைச் சொந்த வாழ்வில் சுவைத்தவர்தாம் பாடவேண்டும் என்பதில்லை. இறைவுணர்விலும் காதல் தத்துவத்தை இழைத்துப் பாடிய தேவார, திருவாசகங்களைக் காண்கிறோம்.

''சங்க இலக்கியத்துள் அகத்திணைப் பாடல்களும் அவற்றைப் பாடிய புலவர்கள் தொகையும், புறப்பொருளைவிட மும்மடங்கு மிஞ்சியிருத்தலை நோக்குங்கால், சங்கத்துச் சான்றோர் அகம்பாடுவதையே புலமைக்கிடனாகப் போற்றினர் என்ற கருத்து வெளிப்படுமன்றோ?'' எனப் பேரறிஞர் வ.சுப. மாணிக்கம் அவர்கள் வினவுவதை அவர்தம் நூலாகிய 'தமிழ்க் காதலி'ல் காணலாம். அகப்பாடல்கள் பாடுவது மிகுதி என்பது உண்மை; புலமைக்கு அகப்பாடல்கள் வழிவகுத்தன. ஏனெனில், இயற்கை நிகழ்ச்சியாம் காதல் பாடல் பாடப்படுவதும் பாராட்டப்படுவதும் உலகு எங்ஙணும் காணப்படுகிறது. எனவே, பாடல்களும் மிகுதியாகக் காணப்படுகின்றன. இக்காதல் பாடல்களை ஒப்பிட்டு நோக்கும்போது பழந்தமிழர் அகப்பாடல்கள் நமக்குச் சில உண்மைகளைத் தருகின்றன.

பொதுவாக, ஒப்பிடுவது ஒப்பீட்டிற்கு அன்று, ஒப்புமைகள் காணப்படுவதால் ஒப்பிடுகின்றோம். அந்நிலையோடு ஒப்பீடு நிறைவு பெறுவதில்லை, ஒப்பீட்டினால் சில உண்மைகளும் கொள்கைகளும் உருவாகின்றன. சங்க காலத்தில் தமிழ்க் காதல் கவிதைகள் வடமொழிக் காதற் கவிதைகளோடு ஒப்பிடப்பட்ட இவ்விரண்டு வடமொழிக் காதற் கவிதைகளோடு ஒப்பிடப்பட்ட இவ்விரண்டு கவிதைகளுக்குமிடையில் காணப்படும் அடிப்படை ஒப்புமைகளையும் வேற்றுமைகளையும் சுட்டியதோடுமட்டுமல்லாமல் சில உண்மைகளையும் கூறுகின்றனர்.

காதல் கருவும் உருவும்

காதல் கருவாக இன்றி, இலக்கிய உருவைப் பற்றிச் சிந்திக்க இயலவில்லை. சங்ககாலச் சான்றோர் காதலை மையமாக வைத்தே கவிதைகளை யாத்திருப்பதைக் காணலாம். ஒரு நாட்டின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் காதல் இலக்கியத்தின் வழிக் காண இயலும்.

மனித வாழ்க்கையில் காதல் உறவுகள் மறக்க இயலாதவை. பாலியல் உறவும் காதல் உணர்வும் நீக்கமற நிறைந்து காணப்படுவதால், இவற்றில் ஒன்றிலிருந்து ஒன்றினைப் பிரித்தறிவது சூழல்வழிக் காட்டுவதாகும். எனவேதான் ாவலக்கு எல்லிசு (Havelock Ellis) காதலைக் காமம், நட்புறவு, காதல் ான்பர். உடலுறவு எனும் பொருள் காமத்திற்குத் தரப்படுமானால், அது எள்ளி நகையாடப்படுகிறது!

ஆடவர் அவாவும் பெண்மையும், பெண்டினர் அவாவும்

ஆண்மையும் பாலியல் உறவுடைய காதலாகும்.

காதலில் வேறுபாடுகள், பயன்கள், அதைப்பற்றிய எண்ணங்கள், காதலில் ஏற்படும் நெருக்கங்கள் காதல்மொழி, காதல் காட்டும் முகங்ககள் இவை காதல் காட்டும் இலக்கியக் கருப்பொருள்கள் எனலாம். உலகில் காதல் இலக்கிய அடிக் கருத்துக்கள் பல்வேறு திறத்தன. காதல் மனித உள்ளங்களைப் பிணைப்பது போல் பிறிதொரு உணர்ச்சி இருப்பதாகத் தெரியவில்லை.

காதல்படைப்பாளிகள்படைப்பில்காதலைக்காதல்கொள்கின்றனர். காதல் வயப்படும் கதைமாந்தர் படைப்பாளிகளால் கவரப்படுகின்றனர்.

அகத்திணையில் உளவியல்

பழந்தமிழ்க் கவிஞர்கள் அகத்திணையில் பகுப்பாய்வு முறையில் உளவியலைத் தேர்ந்து தெளிந்து பாடியுள்ளனர்.

நீடு நினைத்து உளவியலை நலஞ்சேர்க்கும வகையறிந்து உண்மை வாழ்வின் அடிப்படையில் கவிதைகள் யாத்த கவிஞர்களைச் சங்க இலக்கியத்தில் காண்கிறோம்.

சங்கத்துச் சான்றோர்க்கு அறிவியல் நோக்கு உண்டென்பதை மெய்ப்பிக்க இயலும். ஆனால், இன்றைய திறனாய்வு நோக்கோ கலைபயில் தெளிவோ இந்நிலையைக் கண்டு கொள்ளாமல் இருப்பது பெருவியப்பே!

புலவர் உள்ளுணர்வால் பெற்ற தெளிவை நாம் உணர்வதில் குறைபாடுகளும் இருக்கலாம். இலக்கிய உளவியல் குறித்த அறிவு, வளர்ச்சி அடைந்த நிலையில்.கவிதை காட்டும் உளவியல் கூறுகளை ஆய்தல் நன்று, அதனால் இலக்கியம் காட்டும் உளவியலை அறிதல் ஒல்லும்.

ஏன்?... என்று கேட்கிற அறிவும், எப்படி என்று சிந்திக்கிற திறனும் அறிவியல் பகுப்பாய்வு முறைக்கு இட்டுச் செல்கின்றன.

காதலின் ஆற்றலை உயிரியல் ஆய்வாளர் ஆராயத் தலைப்படும் காலம் வந்துவிட்டது! இயற்கை மனிதனுக்கு அளித்திருக்கும் ஆற்றல்களில் ஒன்று காதல்ஆகும். காதல் மனநிலை, பாதிப்புக்கள், தாக்கங்கள், விளைவுகள் இன்ன

பிற தாக்குரவுகள் சிந்திக்கவும் ஆராயவும் தக்கன.

காதலினால் ஏற்படும் ஆழ்மனத்தாக்கும் மனித இயற்கை எனலாம். இத்தாக்கத்தினால் மனித நோக்கங்களும் செய்கைகளும் மாறுதடைகின்றன. சமுதாய உறவுகள் காதல் தரும் ஆற்றலால் சீர்மைபெற்று உயர் ஆக்கச் சிந்தனைக்கு வழி வகுக்கிறது.

மனத்தின் அடிப்படைத் தேவை

கவிதையும் காதலும் மனித மனத்தின் அடிப்படைத் தேவைகள் ஆகின்றன. அளப்பரும் படைப்பாற்றல் காதல் கற்பனைகளால் ஏற்படுகின்றன.

இடைக்காலத்தில் காதல் இனப்பெருக்கத்திற்கும் இன்ப எழுச்சிக்கும் மட்டுமே தூண்டுகோலாகக் கருதப்பட்டது. ஆயின், இன்று காதலுணர்வு குறித்த பகுப்பாய்வு (Psychoanalytical Practice) நடைமுறையில் மனித எழுச்சிக்கு வழி வகுப்பதைக் காண்கிறோம்.

உடலும் ஆன்மாவும் சங்கமமாகும் காதல் மருத்துவத் துறையில் பாடமாகும் காலம் வெகுதொலைவில் இல்லை எனலாம்.

டி.டபிள்யூ. வின்னிக்கோட், காதலுக்குப் பிராய்டு தரும் விளக்கத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை! விருப்பும் வெறுப்பும் காதலின் தோற்றுவாய் என்பதோ, சுயநலம் காதலின் தளைப்பில் தோன்றும் என்பதோ சாவு காதலின் பங்காளி என்பதோ வின்னிக்கோட்டுக்கு உடன்பாடில்லை.

பாலியல் உணர்ச்சிகளே அனைத்து மெய்ப்பாடுகளுக்கும் கொடுமுடியாகும்.

ஐம்புல நுகர்வினுள் காம இன்பமே சிறப்புடையது. இச்சிறப்புப் பற்றி வடநூலும் போசராசனும், 'சுவைபல என்று கூறுவோர் கூறுக யாங்கூறுவது இன்பச் சுவை ஒன்றனையுமேயென மிகுத்துக் கூறியதைப் பரிமேலழகர் திருக்குறள் காமத்துப்பால் உரையில் சுட்டுவர். இதனால் பிராயிடின் 'லிபிடோக்' கொள்கையைத் தமிழர் ஏற்றுக்கொண்டதாகக் கருதுதல் வேண்டா. என்றாலும், காதல் கவிதையில் ஏற்படுத்தும் தாக்கம் நலம் பயக்கும் பெற்றியுடைத்து, கவிதையில் காதல் தூய்மை அடைகிறது. இதனால் மனிதநேயம் வளர்ச்சி பெறுகிறது. தகைக்காதல் தணிகிறது. மனநாடகக் காதல் உயர்நிலை ஆக்கம் எய்துகிறது. எனவே, சங்கத்துச் சான்றோர் 'இல்லது, இனியது என்று புலவரால் நாட்டப்பட்டதோர் ஒழுக்கமாக' அகப்பாடல்களை மனநாடக முறையில் யாத்துள்ளனர்.

பாலியல் உணர்ச்சி கவிதையால் உயர்நிலை பெறுவது எப்படி? என்பதைக் காண்போம்.

காதல் சுவை எண்ணி எண்ணி இன்புறத் தக்கது, எண்ண எண்ண

இன்பத்தைக் கூட்டுவது, இதனாலன்றோ வள்ளுவர்,

"அறிதோறும் அறியாமை கண்டற்றால்; காமம்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு"

என்றார்? வள்ளுவர் அறிவிற்கு எல்லை இல்லை என்பார். காதலில் செறியச் செறிய இன்பம் வளர்கிறது என்று சுட்டுவர்.

வேறுபாடா? மாறுபாடா?

தமிழ்க்காதலுக்கும் மேலைநாட்டார் காதல் பாடுபொருளுக்கும் வடமொழி சிருங்காரப் பாடல் பாடுபொருளுக்கும் அடிப்படை வேறுபாடு உண்டு.

தமிழ்க் காதல் பாடுபொருள் தமிழர் இனக் காதல் பாடல்கள்!

ஏனையவை தற்காதல்!

முற்றும்

பொன். பாண்டித்துரைத் தேவர்

பாடிய காவடிச்சிந்து

('96 மே இதழ் தொடர்ச்சி...)

பூவையேயுன்விழி நஞ்சம் மிகவஞ்சம் செய் தேனெஞ்சம்- தனிற்
புக்கது வேறில்லை தஞ்சம் - உன்றன்
புதுநற்கனி யிதழ்வைத்திடு மதுவைச்சிறி துவிற்பல
புண்ணியமாமடி கொஞ்சம் வந்து
நண்ணிடுவாய் சப்ர மஞ்சம்.
பாவையன்னாயுன தோதி தனைக்கோதி மலர்ஜாதி - முல்லை
பாதிரி சண்முக மாதி சூட்டிப்
பாரஞ்செழு முலைமேலணி யாரக்கல வையினானினி
பாவித் தெழுதுவேன் தொய்யிலே எனை
மேவிக் கலந்தணை தையலே
செங்கதிர் போலிந்து மேவி அழல்தூவி யெனதாவி - வாட்டு
தேயென் செய்வேண்டி பாவி உன்றன்
சித்தத்தருள் வைத்தித்தரு ணத்தொத்தொரு - முத்தத்தையென்
சிந்தைமகிழ்ந்திடத் தாராய் பெண்ணே
வந்தென் விரகத்தைத் தீராய்.

மங்கைப் பருவங்கொள் வஞ்சியே அபரஞ்சியே மயல் மிஞ்சியே - கோடி
வந்தனஞ் செய்கிறேன் கெஞ்சியே - ஒளிர்
மலையாயிரு முலையாயரு ளிலையாவுரு கலையாமனம்
வல்லிரும் போகருங் கல்லோ பெண்ணே

சொல்லிதுவோர்பழி யல்லோ.

(9)

கார் வரவு கண்டுந் தலைவன் தேர் வரவு காணாளாய்த் தலைவி தோழியோடு கவன்று கூறியது

மங்கு லொக்கும் தண்குழல்மானே
இனிய செழும் கனிநிகரும்
மாமதுர மென்மொழிந் தேனே - முன்பு
வந்தெனொடுக லந்துமேவிய செந்திநாதர்பி ரிந்துபோகிய

வஞ்சகத்தை யெண்ணு தோறுமே
மனதுநொந்து நனிதளர்ந்து
வாடுவதேயெவ் வண்ணம் மாறுமே.

அங்கசன்க ரும்பு வில்லையே
வளைத்துவெம்போ விளைத்திடவென்
ஆவிசோ தென்ன தொல்லையே - இதை
ஆதியிற்கரு தாதுவைத்திடு காதலித்தவனை வேதனைக்கிடம்
ஆனதினி யென்ன செய்கு வேன்
முருகனிங்கே வருகை கண்டால்
ஆசைதோயுந் தீர் வுய்குவேன்.

விண்ணிலேகார் நண்ணு முன்னமே
விரைவிற்சென்று வருவனென்ற
வேலர்மீளக் காணே னின்னமே மயல்
மீறுதேதுளி மாறிமாமுகில் தூறுதேயவர் ஏறுதேரொலி

வீழுமோவென் செய்ய காதிலே
விம்முதேபொற் கொங்கை மீதிலே.

புண்ணிலேவீழ் அம்பு கள்போலே
நெடிய வாடை படிதலாலே

பூசுசாந்தும் காயுதென் மேலே - அன்றிற்
புட்குலங்கள்து ணைக்கிரங்கிஅ ழைக்கு முன்பினம் -மிக்க வன்பொடு

போவதைப்பார் நெஞ்சு ருக்குதே
உடல்மெலிது திடனழிந்து
பூவமளி யும்வெ றுக்குதே.
நம்புதொண்டர் அன்பொடுஞ் சூழும்
வளங்குலவி விளக்குசிவ
ஞானமாபு ரந்தனில் வாழும் - குகன்
நாரிபாகர்கு மாரனாகிய வீரவேலுடை யாறுமாமுகன்

நாவுமெய்யல் லாதி சைக்குமா
எனக்குமிங்கே யனத் தொடும்பால்
நாவிபோல வேகசக்குமா.

வெம்புசூரன் றன்கு லம்போல
கொண்டல்கள் வானில் மண்டியெழுந்து
வெய்யவாள்போல் மின்னி மென்மேலே - அவர்
வீரவெங்கணை நேரெனும்படி மாரியுஞ்சில துாறுகின்றது

வேலன்வந் தென்னை மேவியே
பரிவுகொண்டு மருவினாலிவ்
வேளையுய்யும் என்ற னாவியே

(10)

பரத்தை பாற் செல்லலுற்ற தலைவனொடு தலைவி
புலந்து கூறியது

சேவலைத்துவச மாவுயர்த்தியருள் சீலனே
அனுகூலனே வடிவேலனே - செழும்
தேனுலாவுசிவ ஞானமாபுரி கொள்
சேயனே அப்ர மேயனே.

தீவினைப் பிறவி வீவுறச் செய்யும் தீதனே

உயர்போதனே வள்ளிநாதனே - அந்தத்
தெரிவைமீதுவைத்த பரிவெலா மெனக்குத்
தெரிந்ததே நன்றாய்த் தெரிந்ததே.
சூர்குலத்தையற வேரறுக்கவரு துங்கனே
அகளங்கனே யேழை பங்கனே - வேறு
தோகையாள் தன்னிடம் மோகமாகியதும் தொன்மையோ
என்ன நன்மையோ.
ஏரகத்தும்நினை வோரகத்துமுறை ஈசனே
உம்பர் நேசனே சுப்ர காசனே - அங்கே
ஏகவேயில்வண்ணஞ் சாகசஞ் செய்குவ தேதய்யா
என்ன சூதய்யா.
கொம்மை வெம்முலையாள் கைம்மருந்திற் சிக்கிக் கொள்ளவோ
என்னையெள்ளவோ விட்டுத் தள்ளவோ - இந்தக்
கோலங்கொண்டுபல ஜாடஞ்செய்து பொய்யே கூறினீர்
வழி மாறினீர்.
தம்மையேமதிக்கும் அம்மடந்தையென்ன தஞ்சமோ
பெண்கள் பஞ்சமோ யார்செய் வஞ்சமோ - ஐயோ
சந்தைவந்தவரைச் சொந்தமென்றுகொண்டு சார்கிறீர்
நாளும் சேர்கிறீர்.
வேளைதப்பிடாதன் னாளிடத்திலேக வேணுமோ
மனங்கோணுமோ கோபங்காணுமோ - ஆசை
மீறினாலுமுறை மாறியே செல்வது மேன்மையோ
நல்ல பான்மையோ
வாளையொத்தவிழி யாளிடத்தவர்கு மாரனே
மாமயூரனே கடம் பாரனே - என்முன்
வஞ்சகத்தைமிக நெஞ்சகத்து வைத்தல் மாட்சியோ
எவர் சூட்சியோ.

(11)

தலைவனது தகுதி கூறித் தோழி தலைவியைக் குறை நயப்பித்தல்

சங்கரிம கிழ்ந்தருள் குமாரன் - செழுந்
தண்பொழிற்கடம்பமலர் ஆரன் - வரம்
தந்தருள முத்தடுமு தாரன்
உயர்கீரன் மிகுபேர் - பொடு

சந்ததம்பு கழந்திடும் பூரன்
பொங்குதிரைக் கங்கைநதி ஜாதன் - முகில்
தங்கிடுப ரங்கிரியின் நாதன் - முனி
புங்கவர்ம னகங்ளின தீதன்
மலர்வே தன்புரு கூதன்னொடு
புந்தியின்ம கிழ்ந்துதொழு பரதன்.

கந்தவர விந்தநறும் போதே - நிகர்
சுந்தரமி குந்தமுக மாதே - உனைக்
கண்டுமயல் கொண்டனனுன் மீதே
இனிவாதேபுரி யாதே - வந்து
கந்தனையு வந்தணையிப் போதே.

அந்தரம டந்தையர்கள் கோடி - நிதம்
வந்துளம கிழ்ந்துதுதி பாடி - தொழும்
அம்புயப தன்பெரிதும் நாடி
உனைத்தேடி வந்தால் மோடி - செய்வ
தஞ்சொலிள வஞ்சிமுறையோடு.

தானவர்க ளானவரை நாசம் - செய்து
மானசிவ ஞான புரி வாசம் - புரி
சாமிதய வேமிகவி சேஷம்
அவர்நேசம் ஒரு லேசம் - வரத்
தக்கதோபி றர்க்கதுப்ர யாசம்.

பானலங்கொள் தேனிகர்சொல் லாளே - உக்ர
பாண்டியன்ற னடிமை யாளே - எனப்
பாலனஞ்செய் யுங்குமர வேளே
நெடுந்தோளே உன்கண் வாளே - சென்று
பாயதையா தேயணையிந் நாளே.

(12)

முற்றும்

பிழை உணரப்பட்ட 'கடுஞ்சூல்'

பேரறிஞர் எஸ்.சௌந்தரபாண்டியன்

கடுஞ்சூல் - முற்றிய சூல்.

வயிறு புடைத்துத் தோன்றிய சூலைக் குறிக்கவே புலவர்கள் கடுஞ்சூல் என்றனர். 'நிறை கர்ப்பிணி' என்று கடுஞ்சூல் மகளிரைக் குறிக்கலாம்.

''விலை கடுமையாக இருக்கிறது'' என்றால், விலை அதிகமாக உள்ளது என்பதே பொருள். எனவே, அதிகரித்து, பருத்து, புடைத்து என்ற பொருள் 'கடும்' என்ற தமிழ்ச் சொல்லுக்கு உரியது.

ஆனால், **நச்சினார்க்கினியர்** கடுஞ்சூல் என்று சங்க இலக்கியத்தில் வருமிடமெல்லாம் முதற்சூல் என்றே பொருள் கொள்கிறார். இஃது ஆய்வுக்கு உரியது.

சிறுபாணற்றுப்படையில், ''கடுஞ்சூல் முண்டகம் கதிர்மணி'' (148) என்று வருகிறது. ''முதற் சூலையுடைய கழிமுள்ளி ஒளியையுடைய நீலமணி'' என்று நச்சர் உரை கண்டார்.

முள்ளிச்செடி முதற் தடவையாகப் பூப்பதாக நச்சர் குறிப்பது அவ்வளவாகப் பொருந்தவில்லை. முதல் தடவை பூத்தது, இரண்டாம் தடவை பூத்தது என்றெல்லாம் கணக்குப் பார்த்துக் கூறுவது மரபன்று. முள்ளிச்செடி பூக்கும் போது அஃது அடையும் பூரிப்பை, புடைத்துக் கொண்டிருக்கும் தன்மையையே சிறுபாணாற்றுப்படை குறிக்கிறது.

பெரும்பாணாற்றுப்படையில், ''கடுஞ்சூல் மந்தி'' (395) என்று உள்ளது. இதற்கும் நச்சினார்க்கினியர், ''முற்பட்ட சூலையுடைய மந்தி'' என்றே உரை கண்டார். அஃதாவது, ''முதற்சூலை உடைய குரங்கு'' என்பதே நச்சர் கருத்தாக

உள்ளது. குரங்குக்கு முதற்சூல், இரண்டாம் சூல் என்று யார் கணக்கு வைப்பார்கள்? எனவே, நச்சினார்க்கினியர் உரை மேலும் ஆயத்தக்கது என்பது புலனாகிறது.

குரங்கின் வயிறு புடைக்க முற்றிய **சூலையே** மேலைப்பெரும்பாணாற்றுப் படை அடி நுவலுகிறது. இன்னும், **மதுரைக் காஞ்சியில்,** ''கடுஞ்சூல் மகளிர்'' (609) என்பதற்கு நச்சர், ''முதற்சூல் கொண்ட மகளிர்'' என்றே உரை எழுதுகிறார். வயிறு பெருக்க (முற்றிய) சூல்கொண்ட பெண்களே ஆண்டுச் சுட்டப்பெற் றனர். **கலித்தொகையில்,** ''கடுஞ்சூல் நாகு'' (110:14) என்பதற்கு, நச்சர், 'முதற்சூல் கொண்ட பசு' என்றே பொருள் எழுதுவார். வயிறு விளங்கித் தோன்றிய பசு என்பதே இங்கும் நேர்பொருள்.

'சூலை' ஆய்ந்தால், புலவர்களின் கிடக்கை நமக்குத் தெரியவரும்.

சூல் கொண்டதும், யாருக்கும் தெரிய வராது. விலங்காயினும் பெண்ணா யினும் இதுவே நிலை. சூல் முற்ற முற்றத்தான் வெளியார்க்கு அது தெரியவரும்.

எனவே, வெளியே தெரிகின்ற சூல் என்று குறிப்பிட்டு உரைக்கவே, 'கடுஞ்சூல்' என்ற தொடரைப் பழம் புலவர்கள் பயன்படுத்தி உள்ளனர் எனலாம்.

இவ்விதம் ஆயுழி, 'கடுஞ்சூல்' என்பது முற்றிய சூலையே குறிக்கும் என்று கோடலாம்.

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மிகக்குறைந்த செலவில் அறிமுகப்படுத்தும்

மீனாட்சி ஹெல்த் கேர் திட்டம்

மிகக் குறைந்த செலவில் அனைத்து உடல் பரிசோதனையும் செய்துகொள்ள அரிய வாய்ப்பு

திட்டத்தின் சிறப்பு பரிசோதனைகள்

1. தலை முதல் கால்வரை பரிசோதனை
2. விரிவான முறையில் கண் பரிசோதனை
3. பல் பரிசோதனை
4. இரத்தப் பரிசோதனை
5. சிறுநீர் பரிசோதனை
6. ஸ்கேன்
7. நெஞ்சு எக்ஸ்ரே
8. ஈ.சி.ஜி

★ இரத்தவகை
★ சீரம் கிரியேட்டினைன்
★ சர்க்கரை அளவு
★ கொலஸ்ட்ரால் அளவு

கூடுதல் பலன்கள்

★ இலவசமாக இரத்த அழுத்தம் பார்த்தல்
★ இலவசமாக இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவு
★ இலவசமாக இரண்டுமுறை தலைசிறந்த நிபுணர்களால் ஆலோனை (ஒரு வருடத்திற்கு)

இத்தனையும் ரூ.400/- செலவிலேயே

பெண்களுக்கு: பெண் மருத்துவரின் சிறப்பு ஆலோசனை மற்றும் புற்றுநோய் சம்பந்தமான ஆலோசனைகள் வேண்டுமெனில் கூடுதல் ரூ.50/- செலுத்தவேண்டும்.

தொடர்புக்கு:

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்

Only Private Hospital in South Tamilnadu Approved by State Govt. for Govt. Employees (G.O.Ms. No. 490/19/6/95)

MMHRC

லேக் ஏரியா, மேலூர் ரோடு, மதுரை-625 107.

Ph: Call: 42481 (5 Lines) 535977 (3 lines)

உயர்ந்த மருத்துவம் குறைந்த செலவில்

USHA GRAPHICS, 34, Subramaniya Pillai Street, S.S. Colony, Madurai-10. Ph: 602896